# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 31 Mar 2018 Issue - 3


ஆசிரியர் உரை

## எல்லாமே போச்சா, எல்லாமே வீணாப் போச்சா?

**போ**ச்சு என்ற சொல்லும், எல்லாமே போச்சு மற்றும் எல்லாமே வீணாப்போச்சு என்ற சொற்றொடர்களும் ஒரு மகிழ்ச்சியான அல்லது திருப்தியான மனநிலையின் வெளிப்பாடுகளல்ல. மாறாக, அவைகள் துக்கத்திற்கும், அதிருப்திக்குமான அடையாளங்களே. மானிடர்களாகிய நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் ஏற்றத் தாழ்வுகளையும், நன்மை தீமைகளையும் சுக துக்கங்களையும் உள்ளடக்கிய இப்பாழுலக வாழ்க்கையின் ஏடாகூடமான சூழ்நிலைகளில் நாம் இப்படியாகப் புலம்புவதையும், குறைந்தபட்சம் வெளிக்காட்ட முடியாமல் முணு, முணுப்பதையும் தவிர்க்க முடிவதல்லை. ஆம், எதிர்பார்த்த ஒன்று நடக்க வாய்ப்பே இல்லை என்ற நிலை வரும்போது அல்லது எதிர்பாராத ஒன்று சடிதியாய் நேரும்போது அல்லது நடந்த ஒன்று நடக்காமல் போயிருந்திருக்குமானால் என்று எண்ணும்போது அல்லது நடக்காத ஒன்று நடந்திருக்குமானால் என்று நினைக்கும்போது உள்ளத்தின் குமுறலாக இவ்வார்த்தைகள் வெளிப்படும். இச்சூழ்நிலையை நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு கட்டத்தில் கடந்து வந்திருப்போம் அல்லது அப்படிக் கடந்து வந்தவர்களையாவது குறைந்தபட்சம் பார்த்திருப்போம்.

இந்த அனுபவம் பொதுவான ஒன்றுதான். எப்படியெனில் **எல்லாருக்கும் ஒரே விதமாய்ச் சம்பவிக்கிறது சூரியனுக்குக் கீழே நடக்கிறதெல்லாவற்றிலும் விசேஷித்த தீங்காம்** (பிர.9:3) என்றே ஞானி சாலொமோன் கூறியுள்ளார். இன்னும், சொல்லப்போனால் இது சரீர வாழ்க்கைக்கும் பொருந்தும், ஆன்மீக வாழ்வுக்கும் பொருந்தும். ஆம் பவுலடியாரின் ஆன்மீக வாழ்வும் இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு விதிவிலக்காக இருக்கவில்லை. எப்படியெனில், கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில் கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால் எங்கள் பிரசங்கமும் விசுவாசமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா, அதாவது

எல்லாமே வீண், எல்லாமே போச்சு என்று (1கொரி.15:14) அங்கலாய்த்துள்ளார்.

சரி, பவுலடியார் ஏன் இப்படிப் புலம்பினார். என்பதைக் கிட்டப்போய்ப் பார்த்துப் புரிந்துகொள்ளவும், இதிலிருந்து நமக்கென்ன பாடங்கள் கிடைக்கிறதென்பதை அருகில் சென்று கவனித்து அறிந்து கொள்ளவும், ஆசானின் ஆச்சாரப்படி இதன் பின்னணிக் காரியங்களுக்குள்ளாகக் கடந்து போவோம்.

கொரிந்து பட்டணம் பண்டைய கிரேக்கப் பேரரசு காலந்தொட்டு உலகளாவிய வணிகப் பட்டணமாக விளங்கிய ஒன்று. பவுலடியாரின் நாட்களில் இதன் முக்கியத்துவம் மேலும் அதிகரித்திருந்தது. இதற்குக் காரணம் கொரிந்து ஒரு வியாபாரக் கேந்திரமாகத் திகழ்ந்ததோடு அகாயா பிராந்தியத்தின் தலைநகரப் பட்டணமாகவும் மாறியிருந்தது. இதன் பூகோள அமைப்பும், இயற்கையாகவே அமைந்திருந்த துறைமுக வசதியும் அன்றைய உலகத்தின் பார்வையை இப்பட்டணம் தன்னை நோக்கி இழுக்க வைத்தது. இது ஒரு வகையில் நன்மையாகவும், இன்னொரு வகையில் தீமையாகவும் மாறியது. உலகின் பல கலாச்சாரங்களையும், பழக்க வழக்கங்களையும், பல நம்பிக்கைகளையும் கொண்டவர்களின் வருகை இப்பட்டணத்திற்கே உரிய கலாச்சாரத்தில் சீரழிவையும், ஒழுக்க ரீதியாகப் பேரழிவையும் ஏற்படுத்தியது. இச்சூழல் இவர்களின் பக்தி வாழ்வைப் பதம் பார்த்து ஆன்மீக ரீதியில் பெரும் அவலத்தை ஏற்படுத்தியிருந்தது.

இப்பின்னணி கொண்ட கொரிந்துவில், கிறிஸ்துவின் நற்செய்தியைத் தன் உயிராகவும், கிறிஸ்துவின் நற்செய்தி சொல்லும் உபதேசத்தைத் தன் மூச்சாகவும் கொண்ட பவுலடியார், தன் ஊழிய வாஞ்சையாலும், தன் ஆத்தும பாரத்தாலும் தன்னுடைய இரண்டாவது நற்செய்திப் பயணத்தின் இறுதியில் கிறிஸ்துவின் ஒன்றான மெய்ச் சபையை ஆரம்பித்தார் (அப்.18:1–18). வெகுபாடுபட்டுக் கொரிந்துவிலே சபையை ஆரம்பிக்கும் முயற்சியில் வெற்றி கண்ட பவுலடியாரால் சபைக்குள்ளாக ஊடுருவிட்ட கொரிந்துவை, அதாவது கொரிந்து பட்டணத்துக்கே உரிய கிறிஸ்தவ அறத்திற்கு எதிரான பக்திப்பிசகு கொண்ட வழக்கங்களை சபையை விட்டு முற்றிலும் விரட்ட முடியவில்லை. விலையேறப்பெற்ற கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, பாவமன்னிப்புப் பெற்றவர்கள் (1 பேதுரு1:19), அந்த நிலையில் தங்களைக் காத்துக்கொள்ளாமல் போகும்போது விழுந்து இழந்து போக வாய்ப்புண்டு என்பதற்குக் கொரிந்து பட்டணம் மிகச்சிறந்த ஓர் எடுத்துக்காட்டு.

இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் கழுவப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கர்த்தருடைய சபைக்குள் இருக்கக்கூடாதவைகளாகிய பிரிவினைகள், ஒழுக்கக் கேடுகள், வம்பு வழக்குகள், சுயநலம், கர்த்தரின் பந்தி மற்றும் ஆவிக்குரிய வரங்கள் பற்றிய புரிந்து கொள்ளாமை மற்றும் மரித்தோரின் உயிர்த்தெழுதல் பற்றிய அவநம்பிக்கை போன்றவைகளைக் களைந்து, மீண்டும்

அவர்களைக் கிறிஸ்துவின் உபதேசத்திற்குப் பாத்திரராக மாற்றும்படியாய் எடுக்கப்பட்ட முயற்சியின் ஒரு பகுதிதான் முதல் நிருபம். சொல்லப்போனால், இது ஓர் ஒழுங்கு நடவடிக்கை நிருபம். இந்நிருபத்தின் ஆரம்பம் முதல், குறிப்பிட்ட மற்ற பிரச்சனைகளில் வரிசையாகக் கவனம் செலுத்திய பவுலடியார், இந்நூலின் இறுதிப்பகுதிக்கு வரும்போது, குறிப்பாகப் பதினைந்தாம் அதிகாரத்தில் **சபையிலிருந்த சிலரால் மறுக்கப்பட்ட மரித்தோரின் உயிர்த்தெழுதல்** சம்பந்தமாகத் தனது அழுத்தமான கருத்துக்களைப் பதிவு செய்கிறார். ஆம், இந்நிருபத்தின் நீண்ட அதிகாரமாகிய 15-ம் அதிகாரம் முழுவதிலும் இது குறித்தே பெரும்பாலும் பேசுகிறார். கொரிந்துவில் காணப்பட்ட ஏனைய எல்லாப் பிரச்சனைகளைக் காட்டிலும் உயிர்த்தெழுதல் மறுப்பு அவருக்குத் தலையாய ஒன்றாக இருந்துள்ளதென்பதற்கு இந்த நீண்ட வசனப்பகுதியே சான்றாக உள்ளது. ஏனெனில், உயிர்த்தெழுதல் இல்லையென்றால், எல்லாம் வீணாகப் போகும் என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

ஆகவேதான், 15-ம் அதிகாரத்தை ஆரம்பிக்கும்போதே, **அன்றியும் சகோதரரே நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசே-ஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால் அதினாலே, நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே** (15:1,2) என்றதோடு, தான் அப்படிப் பிரசங்கித்த சுவிசேஷத்திற்கான விளக்கம் என்ன என்று அடுத்த இரண்டு வசனங்களில் கொடுக்கிறார். அதாவது, சுவிசேஷம் என்பது, இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், என்று (15:3,4). அத்தோடு நிற்காமல், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு ஏராளமான சாட்சிகள் உண்டு என்று உரக்கக்கூறிவிட்டு (5-7), அத்தோடும் நிற்காமல் அகாலப்பிறவி போன்ற நானும் அச்சாட்சிகளில் ஒருவன் என்று மார்தட்டிவிட்டு, உண்மைநிலை இப்படியிருக்க மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம் என்ற ஓர் இமாலயக் கேள்வியை எழுப்புகிறார்.

கொரிந்து பட்டணத்திலிருந்த உயிர்த்தெழுதல் மறுப்பாளர்கள் மலைத்து நிற்கும்படியான இக்கேள்வியைத் தொடர்ந்துதான், **மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லையென்றால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே, கிறிஸ்து எழுந்திருக்கவில்லை யென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா** (15:13,14). என்று முழங்குகிறார். அதாவது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இல்லையென்றால், **போச்சு, எல்லாமே வீணாப்போச்சு** என்கிறார். ஆனால், உண்மை நிலை என்ன? எதுவும் வீணாகவில்லை. சர்வவல்ல, சர்வ ஞானம் உள்ள தேவனல்லவா உலகத்தோற்ற முதல் எல்லாவற்றையும் திட்டமிட்டிருக்கிறார். வீணாகுமா? தேவத்திட்டத்தின்படியான, தேவ சத்தியத்தின்படியான எதுவும், எப்போதும் வீணாகாது.

இப்படி எதுவும் வீணாகவில்லையென்பதைப் பேசும் பவுலடியார்தான் தொடர்ந்து எழுதும்போது, கிறிஸ்து ஆண்டவர்

சம்பந்தமான மேலும் இரண்டு உண்மைகளைப் பகிரங்கப்படுத்துகிறார். ஆக, இம்மூன்று பேருண்மைகளாகிய கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் கிறிஸ்துவின் ஆளுகை, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்தும் நமக்குத் தேவையான சில பாடங்களை இப்போது கற்றுக் கொள்வோம்.

I **கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்**

**எதுவும் வீணாகப் போகவில்லை** என்ற தலைப்பிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் முதல் பாடம் கிறிஸ்து உயிர்த்தெழுந்து விட்டார் என்பது.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அபத்தமாக்க வேண்டுமென்ற நோக்கில் எத்தனையோ பொய்யான கொள்கைகள், கருத்துக்கள், அனுமானங்கள் என்று கடந்த 2000 ஆண்டுகளாகக் கட்டவிழ்ந்து விடப்பட்டு வருகின்றன. இதோ அவைகளில் சில. அவர் மயக்க நிலையிலிருந்ததை மரித்துவிட்டார் என்று தவறாகக் கணித்துவிட்டார்கள் என்பது, அவருடைய சீடர்கள் இயேசுவின் சரீரத்தைத் திருடிச் சென்றுவிட்டார்கள் என்பது மற்றும் இயேசு சரீரத்தில் உயிர்த்தெழாமல் ஆவியில் உயிர்த்தெழுந்தார் என்பது ஆயினும், பரிசுத்த ஆவியின் ஏவுதலால் ஏவப்பட்ட பவுலடியார் **கிறிஸ்துவோ, மரித்தோரிலிருந்து நித்திரையடைந்தவர்களின் முதற்பலனானார்** (1 கொரி.15:20) என்றே பதிவு செய்துள்ளார். வேதாகமத்திலிருந்தும், வேதாகமத்திற்கு வெளியிலிருந்தும் உயிர்த்தெழுந்ததார் என்பதற்குச் சாட்சிகளும், சான்றுகளும் இருக்கிறபடியால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்பது சட்டத்தின் படியும், சத்தியத்தின் படியும் மறுக்கமுடியாத உண்மை.

போதாக்குறைக்கு உயிர்த்தெழுதல் என்பது தன்னுடைய 3½ ஆண்டுகால ஊழியத்தில் இயேசுவின் முக்கியமான உபதேசமாக, இருந்தது. உயிர்த்தெழுதல் பற்றி ஒட்டுமொத்த புதிய ஏற்பாட்டில் 38 முறையும், சபைச் சரித்திரம் பற்றி, பேசும் அப்போஸ்தலர் நடபடிகள் நூலில் 13 முறையும் இடம் பெற்றுள்ளது. சபை ஆரம்பிக்கப்பட்ட பெந்தகொஸ்தே நாளில், 3000 பேரை இரட்சிப்புக்குள்ளாக்கின பேதுருவின் பிரசங்கத்தில், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஒரு முக்கியப் பங்காக இருந்தது (அப்.2:29-36). புறவினத்தாருக்கு நற்செய்தி அறிவிக்கும்படி இயேசுவால் பிடிக்கப்பட்ட அப்போஸ்தலன் பவுலும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை வலியுறுத்தாமலில்லை. **இயேசு கிறிஸ்துவைக் குறித்து தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசே-ஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம் பண்ணினபடி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர், மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார்** (ரோமர் 1:4,5) என்றும், இன்னும், ரோமர் 4:25-ல், அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார் என்றும் கூறியுள்ளார். நாம் கூற முடியும், நம் மரித்த இயேசு உயிர்த்துவிட்டார். அல்லேலூயா!

அன்பானவர்களே! சட்டத்தாலும், சத்தியத்தாலும், இறை மறுப்பாளர்களாலும், உயிர்த்தெழுதல் மறுப்பாளர்களாலும் மறுக்கமுடியாத உயிர்த்தெழுதல் சம்பந்தமாக நம்முடைய பார்வை

எப்படியுள்ளது? இது வருடத்திற்கு ஒருமுறை கொண்டாடப்பட வேண்டிய பண்டிகை என்றளவில் உள்ளதா? அல்லது சத்தியத்தைச் சார்ந்த ஒன்றாக உள்ளதா ? கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைக்க வேண்டுமானால் அவருடைய பாடு, மரணம் போன்றவற்றை நினைக்க வேண்டும். அப்படித்தானே! சரி, அப்படியானால் அவருடைய பாடு, மரணம் இவைகளை வருடத்திற்கு ஒருமுறை நினைத்தால் போதுமா? நம்முடைய வேதாகமம் அப்படித்தான் போதிக்கிறதா? சொல்லுங்கள். வேதாகமம் சொல்வது பற்றியெல்லாம் எங்களுக்குக் கவலை இல்லை. நாங்கள் போகிற சபையின் ஒழுங்கு எப்படியோ அப்படித்தான் செய்வோம் அல்லது எங்களது பாரம்பரியப்படிதான் செய்வோம் என்று அடம் பிடிக்கிறீர்களா? அப்படித்தான் என்றால் இந்நிலை தேவனுடைய பார்வையில் நியாயமாக இருக்குமா?

சரி, இது குறித்து வேதாகமம் என்னதான் சொல்லுகிறதென்று பார்க்கலாமா? பவுலடியார் இதே கொரிந்தியருக்கு எழுதும்போது, **இயேசுவானவர் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றும் பாத்திரத்ததை எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்** (1 கொரி.11:23-25). அப்படியானால், இயேசுவின் தியாக மரணத்தை எவ்வளவு காலத்துக்கு ஒருமுறை நினைவுகூரவேண்டும்? வருடத்திற்கு ஒரு முறையா? இதுவா இயேசுவின் போதனை?

ஆதிக் கிறிஸ்தவர்கள் என்ன செய்தார்கள்? அப்பம் பிட்குதலில் உறுதியாய் தரித்திருந்தார்கள் (அப்.2:42). எவ்வளவு நாளைக்கு ஒரு முறை அப்படிச் செய்தார்கள்? வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்கும்படி கூடிவந்திருக்கிறார்கள் (அப்.20:7) என்று காண்கிறோம். வாரத்தின் முதல் நாள் எவ்வளவு நாளைக்கு ஒருமுறை வரும்? வாரம் தோறும் தானே! அப்படியானால், கிறிஸ்துவின் மரணத்தை வாரம் தோறும் தானே நினைவு கூற வேண்டும். இது தானே நியாயம். பண்டிகைக் கொண்டாட்ட காரியங்களில் எங்களுக்கு நியாயம் எல்லாம் வேண்டாம் என்று சொல்வீர்களானால் அது வேறு விஷயம். ஆனால், நீங்கள் பக்திக் காரியங்களில் நியாயமாய் நடக்க விரும்பினால், வருடத்திற்கு ஒருமுறை அல்ல, வாரம் தோறும் கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூர வேண்டும். செய்வோமா!

## II கிறிஸ்து ஆளுகை செய்கிறார்

**எதுவும் வீணாகப் போகவில்லை** என்ற செய்தியைத் தொட்டு நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், கிறிஸ்து தம்முடைய ராஜ்ஜியத்தில் ஆளுகை செய்கிறார் என்பது.

பவுலடியார், கொரிந்தியருக்குச் சொல்லும்போது, **எல்லாச் சத்துருக்களையும், தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம் என்கிறார்** (1 கொரி.15:25,26). இதன்படி, இயேசு இப்பொழுதும் ஆளுகை செய்து கொண்டிருக்கிறார்.

இயேசுவின் பிறப்புக்கு முன்னே கர்த்தருடைய தூதன் தமது ராஜ்ஜியத்திலான இயேசுவின் ஆளுகை குறித்து முன்னறிவித்தார். **அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார் அவருடைய ராஜ்ஜியத்திற்கு முடிவிராது என்றான்** (லூக்கா 1:32, 33). இயேசு இப்பொழுது ஆளுகை செய்கிறார் என்றால், இம்முன்னறிவிப்பின்படி, இயேசுவின் ஆளுகை எப்போது ஆரம்பமாயிற்று? சபை ஆரம்பிக்கப்பட்ட நாளாகிய பெந்தெகொஸ்தே நாளின் மகாப் பிரசங்கத்தினூடே பேதுரு அப்போஸ்தலன், **அவன் தீர்க்கதரிசியாயிருந்து உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின் படி உன் சந்தியிலே கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்று தேவன் தனக்குச் சத்தியம் பண்ணினதை அறிந்திருந்த படியால் அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்று முன்னறிவித்து, அவர் உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிச் சொன்னான்** (அப்.2:30,31). ஆக, அவர் உயிர்த்தெழுந்த போது தாவீதின் சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டார். அப்பொழுதிருந்தே அவருடைய ஆளுகை ஆரம்பமாயிற்று!

இயேசுவானவர் ஊழியம் செய்த நாட்களில் இயேசுவின் ரஜ்ஜியம் அப்போஸ்தலர்களுடைய வாழ்நாள் காலத்திலே வரும் என்று வாக்களித்தார் (மாற்கு 9:1). இப்படி வாக்களிக்கப்பட்ட ராஜ்ஜியம் இயேசு உயிர்த்தெழுந்து பரமேறினபிறகு ஆரம்பமாயிற்று. ஆகவேதான்,பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு ராஜ்ஜியம் வரப்போகிற ஒன்றாகப் பேசப்படாமல், இருக்கிற ஒன்றாகவே பேசப்பட்டுள்ளது (அப்.1:13;8:12).

அடுத்த கேள்வி, இந்த ஆளுகை எதுவரை நீடிக்கும்? இயேசு தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கத் தொடங்கியது முதல் ஆரம்பமான அவருடைய ஆளுகை, கடைசிச் சத்துருவாகிய மரணம் பரிகரிக்கப்படும் வரை நீடிக்கும். அப்படியானால், இது எப்பொழுது நடக்கும்? கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, மரணம் ஜெபமாக விழுங்கப்படும் (1கொரி.15:51-55) என்று பவுலடியார் இதே அதிகாரத்தில் கூறியுள்ளார்.

அருமையானவர்களே! உயிரோடெழுந்த இயேசு, தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து இப்பொழுது ஆளுகை செய்து கொண்டிருக்கும்போது, இயேசு திரும்ப வரும்போது, தம்முடைய ராஜ்ஜியத்தை ஏற்படுத்துவார் என்றும், தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து ஆயிரம் ஆண்டுகள் அரசாளுவார் என்றும் சொல்லுகிறார்களே! அது எப்படி? இது குறித்து பவுலடியாரின் வெளிப்பாட்டைப் பாருங்கள். **அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலானவர் கிறிஸ்து; பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தையும், அதிகாரத்தையும், வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருப்பவருக்கு ராஜ்ஜியத்தை ஒப்புக் கொடுப்பார்** (1கொரி.15:23,24). ஆம், முடிவு உண்டாகும் எதுவும் ஆரம்பமாகாது. ஆம், ராஜ்ஜியத்தை ஒப்புக்கொடுப்பார். ராஜ்ஜியத்தில் 1000 வருட ஆளுகை ஆரம்பமாகாது. பரவசப்படுதல், ஏழுவருட உபத்திரவ காலம் என்பதெல்லாம் வேதத்தில் இல்லாத போதனைகள். ஆயினும், இப்போதனை குறிப்பிட்ட அளவிலான கிறிஸ்துவ சமுதாயத்தால் நம்பப்படுகிறது வேதனையிலும் வேதனை.

பவுலடியாரின் இக்கருத்தை ஆவியின் ஏவுதலைக் கொண்டு பேதுருவும் ஆமோதித்திருக்கிறார். **கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போம்..... அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து பூதங்கள் எரிந்து உருகிப்போம்.... புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்** (2பேதுரு 3:10-13). இப்படி எல்லாம் எரிந்து, உருகி, அழிந்துபோன பிறகு தாவீதின் சிங்காசனம் எங்கே இருக்கப்போகிறது? தாவீதின் சிங்காசனமே இல்லாதபோது 1000 வருட அரசாட்சி எப்படி நடக்கும்? உணர்ச்சிகளைத் தூண்டும் கற்பனைக் கனவுகளை நம்பாமல், சத்திய வார்த்தைகளின் உண்மைகளை மாத்திரம் நம்பி பக்தி வாழ்வை நடத்துவோமாக!

### III. கிறிஸ்து இரண்டாம் முறை வருகிறார்

**எதுவும் வீணாகப் போகவில்லை** என்ற செய்தியைத் தொட்டு நமக்குக் கிடைக்கும் இன்னொரு பாடம் கிறிஸ்து மீண்டும் வருகிறார் என்பது.

பூமியில் பிறந்த ஒவ்வொருவருக்கும் மரணம் எப்படி நிச்சயமோ அதுபோன்று கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நிச்சயமானது. உலகம் நம்புகிறதோ, இல்லையோ, கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளுகிறவர்கள் ஆயத்தமாயிருக்கிறார்களோ இல்லையோ கிறிஸ்துவின் வருகை நிச்சயம். புதிய ஏற்பாட்டிலுள்ள 27 நூல்களுள் 15 நூல்களில் கிறிஸ்துவின் வருகை 300க்கும் அதிகமான முறை குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, ஒவ்வொரு 25 வசனங்களுக்கு ஒருமுறை கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இடம்பெற்றுள்ளது. வேதாகமத்தின் கடைசி நூலாகிய வெளிப்படுத்தலில் மட்டும் மூன்று முறை உள்ளது. அதுவும், மூன்றாம் முறை **மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்** (வெளி.22:20) என்று இயேசு தாமே குறிப்பிட்டுள்ளார். இயேசு ஒன்றை இப்படித் தெளிவாகச் சொல்லியிருக்கும்போது, அருடைய வருகை பற்றி கேள்வி எழுப்புவதை என்ன சொல்வது? இப்படிப்பட்டவர்களைக் குறித்து நாம் பெரிதாகக் கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில், வேதாகமத்தின் காலத்திலேயே சிலர் **அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று பேசியுள்ளனர்** (2பேதுரு3:9).

1 கொரி.15:23,24-ம் வசனங்களில், **பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அதன் பின்பு முடிவு உண்டாகும்....** என்கிறார். இங்கே கேள்வி எதற்கு முடிவு உண்டாகும் என்பது. அதாவது, எபிரெயரில் 1:1-2-ம் வசனங்களில் கடைசி நாட்கள் என்று பார்க்கிறோம் அல்லவா, அந்தக் கடைசி நாட்களுக்கு முடிவு உண்டாகும். இந்தக் கடைசி நாட்கள் பற்றி யோவேல் தீர்க்கனும் (2:28,29), ஏசாயா தீர்க்கனும் (2:2,3) முன்னறிவித்திருக்கிறார்கள். பேதுரு இது குறித்து பெந்தெகொஸ்தே நாள் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார் (அப்.2:16-18). நாம் கடைசி நாட்களில் தான் வாழ்ந்து கொண்டுள்ளோம். **இந்தக் கடைசி நாட்களின் கடைசி நாளில்தான்** கிறிஸ்துவின் வருகை இருக்கும்.

அப்பொழுது எல்லாவற்றுக்கும் முடிவு உண்டாகும். பவுலடியார் இதைத்தான் மேலுள்ள வசனங்கள் மூலமாக விளக்கியிருக்கிறார்.

கிறிஸ்துவின் வருகை வரை மரணம் ஆளுகை செய்யும். கிறிஸ்துவின் வருகையின் போது மரணத்திற்கு **முடிவு** உண்டாகும். ஏனெனில், அவருடைய வருகையில் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம் தான் (15:23-26). பவுலடியார் சொல்வதை நன்றாகக் கவனிக்க வேண்டும். முதலில் உயிர்த்தெழுதல், பிறகு முடிவு. இயேசு ஆண்டவர் கடைசி நாளிலான உயிர்த்தெழுதல் குறித்து வாக்குரைத்துள்ளார் (யோவான்6:39,40). இவ்வுண்மையை பெத்தானியா ஊர் மார்த்தாள் நன்கு அறிந்து வைத்திருந்தார்கள். **மரித்துப்போன உன் சகோதரன் லாசரு உயிர்த்தெழுந்திருப்பான் என்று இயேசு சொன்னபோது, அதற்கு மார்த்தாள்: உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள்** (யோவான் 11:23,24). ஆகையால், **முடிவு** என்பதும் **கடைசி நாள்** என்பதும் ஒன்றே. கடைசி நாள் என்பதற்கும், கடைசி நாட்கள் என்பதற்கும் பெருத்த வேறுபாடு உண்டு.

அன்பானவர்களே! நாம் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டுள்ளோம்.(1யோவான் 2:13). இந்தக் கடைசி நாட்களின் கடைசி நாளில் கிறிஸ்துவின் வருகை இருக்கப்போகிறது. அத்தோடு எல்லாம் முடிவுக்கு வரும். 1000 வருட அரசாட்சி எல்லாம் கிடையவே கிடையாது. அப்படியானால், கடைசி நாளாகிய இயேசுவின் வருகையின் நாளுக்கு நாம் ஆயத்தமாக இருக்கிறோமா? சொல்லுங்கள்.

இரண்டாம் வருகையின் நாளாகிய அந்த நாளைத் தள்ளிப்போடுவதற்குக் காரணம், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (IIபேதுரு3:9) அப்படியானால், நாம் மனந்திரும்பி விட்டோமா அல்லது அவருடைய நீடிய பொறுமையைச் சோதித்துக் கொண்டுள்ளோமா?

கடைசி நாளாகிய அவருடைய வருகையின் நாளிலே சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமா? தெரியாதா? (2கொரி.5:10). நியாயத்தீர்ப்பின் நாளை தைரியமாய் எதிர்கொள்வதற்கு புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படியான கனிகளுடன் கூடிய மனந்திரும்புதல் அவசியம். மனந்திரும்ப வேண்டுமென்பது தேவ கட்டளை (அப்.17:30) தேவ கட்டளை மீறப்படக்கூடாது. ஆம், சபை ஆரம்பிக்கப்பட்ட நாளில் கூடியிருந்த ஆயிரங்களிலானவர்களிடத்தில் **நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று சொன்ன போது, அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்ட 3000 பேர் ஞனஸ்நானம் பெற்றுக் கொண்டு கர்த்தராலே அவருடைய சபையாகிய கிறிஸ்துவின் சபையிலே சேர்க்கப் பட்டார்கள்** (அப்.2:37-47). நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? கிறிஸ்துவின் சிலுவையோ, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோ, கிறிஸ்துவின் உபதேசமோ வீணாக வேண்டாம், வேண்டவே வேண்டாம்.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!**

# பரிசுத்த ஆவியின் வரங்கள் அற்புதங்களா?

Bro. J.C. சோட்

பரிசுத்த ஆவியானவரோடு சம்பந்தப்பட்ட எந்த ஒரு காரியமாக இருப்பினும், அது அற்புதமாக இருக்கவேண்டும் என பல மக்கள் கருதுகின்றனர். உதாரணமாக, பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும், கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியும், அவற்றைப் பெற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு அற்புதங்களைச் செய்யும் வல்லமையைத் தருகிறது என நினைக்கின்றனர். அவர்கள் நினைப்பது சரியே. அப்போஸ்தலர்களும் அவர்கள் யார் மேல் கைகளை வைத்தார்களோ அவர்களும் அற்புதங்களைச் செய்யக்கூடியவர்களாக இருந்தனர். என்ற போதிலும், நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால், பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொண்டவர்கள் இவர்கள் மட்டுமே. இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் எந்த ஒரு மனிதனும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை பெற்றிருக்கவில்லை. ஏனெனில், அப்போஸ்தலர்களும், கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரும் மாத்திரமே அந்த அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தனர். அவர்கள் அனைவரும் மடிந்துபோய் பல நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று வாழும் எவரும் கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெறவில்லை. ஏனெனில், அப்போஸ்தலர்கள் மட்டுமே இப்படிப்பட்ட அற்புதங்கள் செய்யக்கூடிய அளவிலான பரிசுத்த ஆவியை, தங்கள் கைகளை வைத்துக் கொடுக்கும் வல்லமையைப் பெற்றிருந்தனர். அப்போஸ்தலர்கள் அனைவரும் இறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டபடியால், யார் பேரிலும் கைகளை வைத்து பரிசுத்த ஆவியைக் கொடுக்க அவர்கள் இன்று நம்மிடையே இல்லை.

ஆனால், அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:38-ம் வசனத்தில் கூறப்படும் பரிசுத்த ஆவியின் வரங்களும், பரிசுத்த ஆவியின் அற்புத அளவிலானது என பலர் இன்று நம்புகின்றனர். கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பெற்றுக் கொண்டதைப் போன்ற பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும் ஒரு வரம் என்று குறிப்பிட்டுள்ளது உண்மையே. ஆனால், கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும் ஒரு வரம் என்று பேதுரு குறிப்பிட்டதுமின்றி அப்போஸ்தலர்கள் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும் ஒரு வரம் என்று தான் குறிப்பிட்டார். **“ஆதலால் கர்த்தராகிய**

**இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்கு தேவன் வரத்தை அநுக்கிரகம்பண்ணினதுபோல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம்பண்ணியிருக்கும்போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான்"** (அப்.11:17). கொர்நேலியுவுக்கும் அவன் வீட்டாருக்கும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைக் கொடுத்ததின் மூலம் புறஜாதியாரும் யூதர்களைப் போலவே தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தனர் என்பதைக் கர்த்தர் அவர்களுக்குக் கற்பித்ததாக பேதுரு காட்டுகிறார்.

ஆம், பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு ஒரு வரம் தான். அது போல அப்போஸ்தலர்கள் கைகளை வைத்துக் கொடுக்கும் அளவிலான பரிசுத்த ஆவியின் வரம். ஆனால், இதை அறிவது எப்படி? பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் என அப். 2:38–ல் குறிப்பிடப்படுபவர்கள், அந்த ஆவியின் வல்லமையால் அற்புதங்களைச் செய்ய முடிந்ததா இல்லையா என்றோ அல்லது அந்நியபாஷைகளில் பேச முடிந்ததா இல்லையா என்றோ அந்த வசனப்பகுதியை நாம் படித்துக் கூற முடியும்.

நினைவிருக்கட்டும், நாம் அப்போஸ்தலருடைய அதிகாரத்திற்கு வரும்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்திருந்தார்கள். அதிநிமித்தம் பரிசுத்த ஆவியின் வரத்தை அவர்கள் பெற்றிருந்தனர். இப்போது, அற்புதங்களைச் செய்யும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அப்போஸ்தலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு சீடர்களின் மேல் கைகளை வைத்தனர். பரிசுத்த ஆவியின் வரமானது, அற்புதங்களைச் செய்யும் அளவிலான பரிசுத்த ஆவியாகவும் அதைப் பெற்றுக்கொண்டவர்கள் அற்புதங்களைச் செய்யும் வல்லமையை அடையக்கூடியவர்களாகவும் இருந்தால் பின்னர் ஏன் அந்தச் சமயத்தில் ஏழு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏன் அவர்கள் மேல் அப்போஸ்தலர்கள் கை வைக்க வேண்டியதாயிற்று? சீடர்களிலிருந்து ஏழுபேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற அப்போஸ்தலர்களின் நிபந்தனையையும் அவர்கள் பரிசுத்த ஆவியால் நிறைந்திருக்க வேண்டுமென்பது குறிப்பிட்ட தேவைகளில் ஒன்று என்பதையும் கூட தயவு செய்து கவனியுங்கள். ஆனால், பரிசுத்த ஆவியால் நிறைந்திருப்பவர்கள் அற்புதங்களைச் செய்யக்கூடுமானால், பின்னர் அவர்கள் மேல் கை வைக்க வேண்டிய அவசியம் அப்போஸ்தலர்களுக்கு ஏற்பட்டிருக்காது. ஆனால், ஒருவர் பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தால் அவர் அற்புதங்களைச் செய்யும் வல்லமையைப் பெற்றிருக்கிறார் என அர்த்தம் அல்ல என்பது தெளிவு. அப்படியானால், பரிசுத்த ஆவியால் நிறைந்திருப்பது என்பதற்கு அர்த்தம் என்ன? பரிசுத்த ஆவியின் வரத்தை அவர்கள் பெற்றிருந்தார்கள் அல்லது கர்த்தருக்கு யார் கீழ்ப்படிந்தார்களோ அவர்களுக்கு மாத்திரம் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார் என்று பொருள்.

தேவனுக்குக் கீழ்ப்படிபவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுகின்றனர் என்றும், தேவனுடைய ஆலயமாகிய நமது சரீரத்தில் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறார் என்றும், கிறிஸ்து நம்மில் வாழ்கிறார் என்றும் வேதாகமத்தில் பல வசனங்கள் நமக்குக் கூறுகின்றன. (அப். 5:22 ; I கொரி. 3:16, 17; I கொரி. 6:19,20; கலா. 3:27 ; எபே. 4:6). இப்போது மேற்சொன்ன எதுவும் நம்ப முடியாததல்ல. அதாவது, அற்புத தன்மை கொண்டதல்ல. ஒருவன் எப்படி மீண்டும் பிறக்கிறான்? கிறிஸ்துவின் இரக்கம் நம்முடைய பாவங்களை எப்படிக் கழுவுகிறது? தேவ கிருபை ஒருவனை எப்படி இரட்சிக்கிறது? விசுவாசம் எப்படி நமது இருதயங்களில் கிரியை செய்கிறது?இவை அனைத்திலும் அற்புதங்களைக் காணும் சிலர் இருக்கின்றனர். ஒரு குழந்தை பிறப்பதையும், ஒரு விபத்திலிருந்து காப்பாற்றப்படுவதையும் ஒரு அறுவை சிகிச்சை அல்லது ஒரு வியாதியிலிருந்து விடுபட்டு சுகமடைவதையும் கூட அவர்கள் அற்புதம் என்பர். ஆனால், மேற்சொன்னவைகள் சரீர சம்பந்தமுள்ளதாக இருந்தாலும் ஆவிக்குரியதாக இருந்தாலும் எந்த அற்புதமும் அதில் கிடையாது. உண்மையென்னவென்றால் சரீர, ஆவி சம்பந்தப்பட்ட சகல காரியங்களையும் தேவன் அற்புதங்களின் வழியாகவே ஆரம்பித்தார். பின்பு அவ்வித அற்புதச் செயல்களின் இடத்தை சரீரம் மற்றும் ஆவி சம்பந்தமான சட்டங்களால் மாற்றினார். எனவே, குழந்தைகள் அற்புதத்தால் பிறப்பதில்லை. மாறாக, குழந்தைப் பிறப்பின் இயற்கைச் சட்டத்தின்படி அவை பிறக்கின்றன. ஒவ்வொரு காரியத்தையும் ஒழுங்குபடுத்தும் சட்டங்கள் உள்ளன. ஆவிக்குரிய காரியங்களிலும் இதுவே உண்மை. கிறிஸ்து அற்புதங்களைச் செய்தார். அதுபோலவே பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்ற அப்போஸ்தலர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில சீடர்களும் செய்தனர். ஆனால், பின்னர் மனிதனுடைய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த தேவனுடைய வசனம் கொடுக்கப்பட்டது. அதன் பின்பு தொடர்ந்து சகல ஆவிக்குரிய காரியங்களும் எழுதப்பட்ட வசனத்தின்படியே ஒரே சீராக நடைபெற்று வருகின்றன.

உலகில் இப்பொழுது நடைபெற்று வரும் சரீர நிலைகளுக்கான அநேக காரியங்களை நாம் புரிந்துகொள்ள முடியாமலிருக்கிறோம். அப்படிப்பட்டவைகள் கூட அற்புதமானவைகள் தான் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், அவைகள் அற்புதங்களல்ல. நடைபெற்று வரும் சகல காரியங்களையும் நாம் புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருப்பதால் மட்டும் அவை அற்புதங்கள் ஆகிவிடுவதில்லை. மாறாக, அவை அனைத்தும் தேவன் அளித்த சரீர சம்பந்தமான சட்டங்களின்படி நடைபெறுகின்றன. ஆவிக்குரிய நிலைகளிலும், நடைபெறும் பலவற்றை நாம் முற்றிலுமாக புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம்.

அதனால், அவை அற்புதமாக நடைபெறுகின்றன என சிலர் கூற விரும்புகின்றனர். இன்னும் சிலரோ, இதற்கு நேர் எதிர்முனைக்குச் சென்று ஆவிக்கும், மனிதனுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்கிறார்கள். வேறுவிதமாகக் கூறினால், கிறிஸ்தவனுக்குள் ஆவி உண்மையில் வாசம் செய்வதையும் அல்லது கிறிஸ்தவனுக்குள் தேவனும் கிறிஸ்துவும் வாசம் செய்வதை எதிர்ப்பவர்களாகவும் இருக்கின்றனர். ஜெபத்தையும் தேவனுடைய வழி நடத்துதலையும் அர்த்தமற்ற செயல்கள் எனக் கூறுகின்றனர். இப்படிப்பட்ட மனிதர்கள் தவறு செய்கின்றனர். எல்லா காரியங்களும் (இயற்கைக்கு விரோதமான) அற்புதங்களாக நடைபெறுகின்றன என சிலர் போதித்து வருவதின் எதிர் விளைவாகத்தான் தேவனுடைய வழிநடத்துதலை ஏற்றுக்கொள்ள மறுக்கிறவர்களாக இருக்கின்றனர்.

பரிசுத்த ஆவியின் வரம் அற்புதமல்ல என்னும் அதே வேளையில், தேவனுக்குக் கீழ்படியும் ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகிறார். எனவே, கிறிஸ்தவன் தனது இரட்சிப்பின் அடையாளமாக ஆவியைப் பெற்றுக் கொள்ளுகிறான். ( IIகொரி. 1:22; IIகொரி. 5:5; எபே. 1:14). ஆகவே, கர்த்தரில் நாம் இருக்கிறோம் என்றும், கர்த்தர் நம்மில் இருக்கிறார் என்றும் நாம் விசுவாசிக்கிறோம். தேவன் ஜெபங்களைக் கேட்கிறார் என்றும் அவைகளுக்குப் பதிலளிக்கிறார் என்றும் கர்த்தர் நம்மை வழிநடத்துகிறார் என்றும் நாம் விசுவாசிக்கிறோம்.

அதே சமயத்தில், ஆவி , ஜெபம் தேவனுடைய வழிநடத்துதல் மற்றும் பரிசுத்தமும் தெய்வீகமான சகலமும் இன்று புதிய ஏற்பாட்டில் உள்ளபடி, ஆவியின் வசனத்திற்கு அல்லது தேவனுடைய வார்த்தைக்கு ஏற்றபடி ஒழுங்காக நடைபெற்று வருகின்றன என்பதை நாம் விசுவாசிக்கிறோம். வேத வசனங்களில் எழுதப்பட்டுள்ளதற்கு மாறாக எதுவும் நம்முடைய வாழ்க்கையில் நடைபெறுவதில்லை. அவருடைய வார்த்தைகளில் சொல்லப்பட்டதற்கு ஏற்ப, ஆவி நம்மில் வாழ்கிறதின்; அதன் மூலம் தேவன் கிரியை செய்கிறார். ★

## வசனங்களோடு கூட்டலும் எடுத்தலும்

- வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்து கொள்வார், நீ பொய்யனாவாய் (நீதி.30:16)
- வசனங்களோடு எதையாகிலும் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார் (வெளி.22:18)
- வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால் ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார் (வெளி 22:19).

பெண்கள் பகுதி

# அநேக காரியங்களைக் குறித்த வருத்தம்

Sis. Betty Choate / Sis. ரேச்சல் இராஜநாயகம்

“மார்த்தாளே, மாத்தாளே நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய் (லூக்கா:10:41) என்று இயேசு கிறிஸ்து சொன்னார். மார்த்தாளின் இதயம் உலகக் காரியங்களுக்கு அதாவது கரிசனை, உபத்திரவம் இவைகளால் நிறைந்திருந்தது ஏன்? ஒரு காரணமும் இல்லை. ஒருவேளை உணவு தயார் செய்வதுதான். ஒரு சிறிய மண் உருண்டையை பெரிய மலை ஆக்கிவிட்டு, தன் பிரச்சனைகளை தலைக்கு மேலே கொண்டுபோய் வைத்து அதையே பெரிது படுத்தி சுண்டவைத்து அதற்குள் தன்னை கொண்டு வந்து வைத்துக் கொண்டு புலம்பும் அவளுக்குள் இருக்கும் உயர்ந்த பண்புகளை மீண்டும் பெற்றுக் கொள்ளும்படி செய்கிறார்.

இந்த மார்த்தாளைப் போலத்தான் சிக்கி, பரப்பான உலகத்திலே அநேக காரியங்களை நாமே இழுத்துப் போட்டுக்கொண்டு மன உளைச்சல், மன அழுத்தம் இவைகளால் சீரழிந்து கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில், இயேசு மார்த்தாளுக்கு உரைத்த பதில் நமக்கும் மிகுந்த பலனையும் நன்மையையும் கொடுக்கிறது. இந்த உலகமானது பிரச்சனைகளால் நிறைந்து காணப்படுகிறது. உண்மையான பிரச்சனை கொஞ்சமென்றால் கற்பனை பிரச்சனை மிக அதிகமாக, விளையாட்டுத் தனமான காரியங்களைக் கூட இதயமே வெடிக்குமளவுக்கு மிகப்பெரிய ரூபமெடுத்து விடுகிறது. ஓர் ஆசிரியர் தான் எழுதிய புத்தகத்தில் இப்படியாகக் குறிப்பிடுகிறார். ஒரு கதாப்பாத்திரம் தன்னிலுள்ள குழப்பங்களையெல்லாம் கொண்டு கடவுளிடம் சென்று இதை வைத்து வேறு ஒரு உலகத்தை உண்டுபண்ணச் சொல்லுகிறேன் என்று சொன்னாராம். அதைப் போலத்தான் இன்னும் நம்மில் அநேகர் குழப்பங்களால் தவித்துக் கொண்டிருக்கிறோம். இப்படியாக தவித்துக் கொடிருக்கும் அநேகருக்குத்தான் தேவனடைய வார்த்தைகள் தீர்வாயிருக்கிறது. இதைக்குறித்து, இயேசு மார்த்தாளிடம்மாத்திரமல்ல மலைப்பிரசங்கத்திலேயே, **“ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும் என்னத்தை உடுப்போம் என்று உங்கள்**

**சரீரத்துக்காகவும் கவலைப் படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்த வைகள் அல்லவா?** (மத்.6:25) என்று கூறுகிறார். பரிசுத்த ஆவியானவர் சொல்லும்போது **''நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் தேவனுக்குத்தெரியப்படுத்துங் கள்'** (பிலி.4:6) என்று கூறுகிறார்.

இயேசு கிறிஸ்து நாம் என்ன செய்ய வேண்டும் என்று கற்பித்தவர், சில காரியங்களை நாம் செய்யக் கூடாதென்றும் கூறுகிறார். குடும்பத்தைப் பராமரிக்கிற விஷயத்தில் ஓர் ஆண் சோம்பேறித்தனமாக இருக்கக் கூடாதென்று ஆலோசனை சொல்லுகிறார். (1தீமோ.5:8). சக மக்களோடு, அதாவது நமக்கு அருகில் இருப்பவர்களைக் குறித்து அக்கறையற்றவர்களாக இருக்கக் கூடாது. (மத்.25:32-46) என்கிறார். அழிந்துபோகிற ஆத்துமாக்களைக் குறித்து கவலையற்றிருக்கக் கூடாது. (லூக்கா.19:41) **அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டது"** என்று வாசிக்கிறோம். மேலும் பாலிய ஸ்திரீகள் வீட்டில் சோம்பேறிகளாய் இருக்கக் கூடாது என்றும் புத்தி சொல்லுகிறார். (தீத்து 2:5) பிள்ளைகள வளர்க்கும் விஷயத்தில் ஏனோதானோ வென்று இருக்கக்கூடாது (எபே.6:4). சபையின் நலனைக் குறித்து அக்கறையில்லாமலும் கண்டுகொள்ளாமல் இருங்கள் என்று அவர் போதிக்கவேயில்லை (1கொரி:11:28).

சில திறமைசாலிகள் அல்லது சாதித்தவர்களுக்கு சில நேரங்களில் கவலை வந்து அந்தக் கவலையானது வாழ்நாள் முழுவதும் நீடிக்கக் கூடியதாக இருக்கும். ஏனென்றால், அவர்கள் புத்திசாலிகளாய் இருந்து உலகில் தேவை எது என்று பார்த்து அதற்காகப் பாடுபட்டு உழைத்தவர்கள், அதினிமித்தம் சேர்த்து குவித்து வைத்ததால் உண்டாகும் தொல்லையை உணர்ந்து அதிலிருந்து விடுபடக் கற்றுக் கொள்ள வேண்டும்.

"Sand in our shoes" என்று ஒரு வாசகம் உள்ளது. அதாவது காலில் அணியும் ஷீக்குள் இருக்கும் மணல். ஒரு சமயம் நீண்ட தூரம் நடைபயணம் செய்த ஒருவரிடம் உங்களுக்கு பயணத்தின் போது ஏற்பட்ட மிகப் பெரிய இடைஞ்சல் எது? ஒரு வேளை அபாயகரமான மலைப்பகுதியோ? அல்லது கொந்தளிப்பான நதியோ? அல்லது எரியும் பாலைவனமோ? எதுவாக இருக்கும் என நினைத்து இக்கேள்வியைக் கேட்டேன். ஆனால், இதில் எதுவும் இல்லை. அந்த மனிதன் கூறினான் என் ஷீவில் இருந்த மணல் என்று. நம் வாழ்க்கையிலும் இது எவ்வளவு உண்மை. பெரிய பெரிய பிரச்சனைகளைத் தாண்டி வந்த நாம் சிறிய பிரச்சனைகளைக்

கண்டு நாளும் துவண்டு கொண்டுதானே இருக்கிறோம். மலைகள், ஆறுகள், பாலைவனம் இவைகள் அசையாதவைகள். நாம் தான் அதற்கேற்றாற்போல் அநுசரித்துப் போக வேண்டும். மணலை தட்டி எறிவது சுலபம். மீண்டும் மணல் சேர்ந்தால் மீண்டும் தட்டி விடலாம்.

மார்த்தாள் இதுபோல் தான் அன்றாடம் செய்யக்கூடிய சமையல் வேலையை பெரிது பண்ணி அலட்டிக்கொண்டிருந்தாள். சமையல் செய்வதொன்றும் தீமையான செயல் அல்ல. அவள் கண் பார்க்க செய்யும் ஒரு வேலைதான். ஆனால், ஏனோ மலையை வெட்டி முறிப்பது போன்ற உணர்வோடு கவலைப்பட்டுக் கலங்குகிறாள். சிறிய ஒரு பொருளை நம் கண்ணுக்கு மிக அருகில் கொண்டு செல்லும்போது அது மற்ற எதையும் பார்க்கக் கூடாதபடி மறைத்து விடும்.

மேலும், உலகப் பொருள்கள் மேல் அதிக முக்கியம் வைக்கக்கூடாது. **"ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்** (லூக்கா :12:15). பொருளை வைத்து கட்டி யாரும் எடுத்து விடுவார்களோ என்று அழுது கொண்டிருப்பதை விட, தேவைகளைப் பெற்று நிம்மதியாக வாழ்ந்து **"நம்மை விட்டு எடுபடாத ஒன்றைப் பற்றி"** ஏன் அக்கறை காட்டக் கூடாது.

மார்த்தாள் தன் வேலைகளையெல்லாம் ஒருபுறம் தள்ளிவிட்டு இயேசுவோடும், மரியாளோடும் அந்த நாளை கழித்திருக்கலாம். மரியாளைப் பற்றி கவலைப்படாமல், தன்னைப்பற்றி அதாவது சுய பரிதாபம் கொண்டாள் மார்த்தாள். இந்த சுயபரிதாபம் ஒருவனைக் கொன்று போடும். இதை மேற்கொள்ள ஒரே வழி நம்மை விட்டு விட்டு, பிறர் நலத்தில் அக்கறை காட்டவேண்டும். அப்போஸ்தலன், பவுல், பிலிப்பு சபைக்கு எழுதும் போது **ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல் மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்கு வானாக என்கிறார்** (பிலி:2:3,4).

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, வருத்தப்படாமல் நமக்குத் தேவையான ஒன்றாகிய, இயேசு கிறிஸ்து, அவர் இரத்தம் சிந்தி சம்பாதித்த சபையைப் பற்றியதான சிந்தனையுடன் வாழ்வோம். தேவன் அதற்கு தாமே உதவி செய்வாராக! ஆமென்! ★

வாலிபர் பகுதி

# நேரத்தை விரயமாக்காதே

சகோ. பென்னி மார்ட்டீன்

பிரியமான வாலிபர்களுக்கு நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். பொதுவாக நாம் பார்க்கும்போது நேரத்தை விவரிப்பது சற்று கடினமான காரியமாகும். நித்தியத்தின் மடியிலிருந்து பிறந்து தான் நேரம். நம் தேவன் நித்திய வாசி என்றழைக்கப்படுகிறார் (ஏசாயா57:15) ஆனால், மனிதனோ, நேர அடிப்படையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அந்நியமான மனித இனத்துக்கு ஒரு தற்காலிக ஏற்பாடாக நித்தியம் நேரத்தைக் கொடுத்திருக்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுருவின் பாணியில் நேரம் என்பது தேவனுடைய பார்வையில் ஓர் ஓரமாகத்தான் பார்க்கப்படுகிறது. **கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும் ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்ற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்** (பேதுரு3:8). மேலும், இந்த நேரத்தைப்பற்றி பார்க்கும்போது உலகிலேயே மிகவும் விலையுயர்ந்த பொருள் நேரமாகத்தான் இருக்கிறது. இவ்வுலகில் செயயப்படும் எல்லா செயல்களும் நேரத்தை அடிப்படையாக வைத்தே செய்யப்படுகிறது. நாம் நம் வாழ்வை விரும்புகிறவர்களாக இருந்தால் நேரத்தை விரயமாக்கக்கூடாது. ஏனென்றால், வாழ்வே நேரத்தில்தான் உண்டாயிருக்கிறது. கிரேக்க தத்துவ ஞானியான சாக்ரடீஸ் சொல்லும்போது **"நம்முடைய உடைமைகளிலேயே மிகச்சிறந்தது நேரம்தான்"** என்று சொல்வதன் மூலம் நேரத்தின் மதிப்பையும் மாண்பையும் நாம் உணர்ந்துகொள்ள முடியும். பிரியமானவர்களே! இனி இந்த நேரத்தை ஞானமாக எப்படி செலவழிக்க வேண்டுமென்று வேத வசனங்களின் வெளிச்சத்தில் காண்போம்.

## I நேரத்தை நாம் எப்படி செலவழிக்கிறோம்

நம்மில் பலர் உக்கிராணத்துவம் என்பது தேவன் நமக்குக் கொடுக்கிற பொருள்களைச் சரியாகக் கையாண்டு அதைக்குறித்து தேவனுக்குக் கணக்குக் கொடுப்பது மாத்திரம்தான் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். இதன் காரணமாகத்தான் பலர் கர்த்தருக்கென்று எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுப்பார்கள், ஆனால் நேரம் என்று வரும்போது அவர்கள் மறுத்து விடுவார்கள்.

இவ்வுலகிலுள்ள எல்லோருக்கும் சமமாக தேவனால் கொடுக்கப்படும் ஒரே விஷயம் நேரம்தான். எனவே, இந்த நேரத்தை நாம் எப்படி செலவு செய்திருக்கிறோம் என்பதைக் குறித்து நாம் தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும். இன்றைய நாட்களில் பெரும்பாலான வாலிபர்கள் பொழுதுபோக்குக் காரியங்களுக்காகத் தங்கள் நேரத்தை அனாவசியமாக செலவழிக்கிறார்கள். நாம் நேரத்தை அதிகமாக கேளிக்கைக் காரியங்களுக்காகச் செலவழிக்கும்போது அதினிமித்தம் ஆவிக்குரிய வாழ்வில் விஷத்தை எடுத்துக் கொள்கிறோம். அப்போது, நாம் நம் தரத்திலிருந்து இறங்கி எளிதாகக் கோபப்பட்டு கெட்ட வார்த்தைகள் நம் வாயிலிருந்து வரவும், சோதனை வலையில் விழுந்து விடவும் அனுமதித்து விடுகிறோம். ஆவிக்குரிய வாழ்வில், விஷம் கடைசியாக ஆவிக்குரிய மரணத்திற்கு வழிவகுத்து விடுகிறது.

இன்று வாலிபர்கள் மத்தியில் இவைகள்தான் நடந்து கொண்டிருக்கின்றன? பெரும்பாலான வாலிபர்கள் இணையதளத்தில் தங்கள் இதயத்தை இணைத்தும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தும் தங்கள் நேரத்தை விரயமாக்குகிறார்கள். தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் எல்லா நிகழ்ச்சிகளும் மோசமான நிகழ்ச்சிகளல்ல. ஆயினும், அவைகள் நாம் தேவனுக்கு செலவழிக்க வேண்டிய நேரத்தை நம்மிடமிருந்து பரித்துக் கொள்கின்றன. தேவனுக்கு திரும்பக் கொடுங்கள் என்னும் சொற்றொடர் பெரும்பாலான நேரங்களில் பணத்தை குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், நான் இங்கே அதை நேரத்திற்குப் பயன்படுத்துகிறேன் யாக்கோபு 1:27-ல் சுத்தமான பக்தியைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. சுத்தமான பக்தி என்பது மற்றவர்களிடம் அன்பு காட்டுவதற்கு நேரம் என்னும் விலையை நாம் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. ஜனங்களுக்குப் பணத்தை வாரி இறைப்பது மட்டும் அவர்களுடைய தேவைகளைச் சந்திக்காது. சுத்தமான பக்தி என்பது தேவனோடு நேரத்தைச் செலவழித்து அதற்குப் பிறகு நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கு நன்மை செய்வதாகும்.

**II காலத்தின் அருமை கருதி அதை ஞானமாகப் பயன்படுத்த வேண்டும்.**

நேரத்தை நாம் பணம் அல்லது மற்ற பொருள்களைப் போல் சேமித்து வைக்க முடியாது. அதை நாம் ஒன்றிலே ஞானமாக செலவழிக்க முடியும் அல்லது ஞானமில்லாமல் விரயம் செய்ய முடியும். மனிதனால் நேரத்தை உருவாக்கவோ அல்லது உருக்குலைக்கவோ முடியாது. ஆனால், நேரம் தேவனால் மனிதனுக்கு வஞ்சனையில்லாமல் வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பணவீக்கத்தைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் நம் அன்றாட வாழ்வில் அதை எதிர்கொண்டுதான் வருகிறோம். ஆனால், நேர

வீக்கத்தைப் பற்றி இங்கே நான் பேசுகிறேன். அதாவது, ஒரு காரியத்தை நாம் சரியான நேரத்தில் செய்யத் தவறும்போது நேரம் செல்ல செல்ல அதன் மதிப்பு உயர்ந்து கொண்டே போகிறது. இதைத் தான் நேர வீக்கம் என்றழைக்கிறோம். இன்றைய நவீன உலகத்தில் நேரத்தை மிச்சப்படுத்தும் நவீன கருவிகள் நம் இல்லங்களில் அங்கம் வகிக்கின்றன. இருந்தபோதிலும் எனக்கு நேரமில்லை என்று பலர் புலம்புவதை நாம் கேட்டிருக்கிறோம். அதிலும் குறிப்பாக, ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபட நேரமில்லை என்று சொல்லும்போது நமக்கு கவலையாக இருக்கிறது. நாம் வேத வாக்கியங்களை வாசிப்பதற்கு 90 நிமிடங்கள் எடுத்துக் கொண்டால் 45 நிமிடங்களை அவைகளைத் தியானிக்க ஒதுக்க வேண்டும். இப்படி ஞானமாக நாம் நேரத்தை செலவழிக்க வேண்டும். சங்கீதக்காரன் நேரத்தின் அருமை கருதித்தான் **கர்த்தாவே நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும் என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரியும்** என்று பாடுகிறார் (சங்கீதம்39:4).

பிரியமானவர்களே! இப்பூமியில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரம் மிகவும் குறைவு. இந்த நேரமும் தேவனிடமிருந்து நமக்கு இரவலாகத் தரப்பட்டிருக்கிறது. அதை நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்று தேவனுக்கு கணக்குக் கொடுக்க வேண்டும். எப்படி பணம், தாலந்து மற்றும் உடமைகளுக்கு நாம் உக்கிராணக்காரர்களாக இருக்கிறோமோ அதேபோல், தேவனால் நமக்குத் தரப்பட்டிருக்கும் நேரத்திற்கும் உக்கிராணக்காரர்களாக இருந்து தேவனுக்கு நாம் கணக்குக் கொடுக்க வேண்டும். எனவே, நேரத்தை நாம் விரயமாக்காமல் பரமனுடைய பாதத்தில் நம்மை சமர்ப்பித்து அருடைய மகிமைக்கென்று வாழ்வோம். தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென். ★

## வெளிப்படுத்தின விசேஷத்தில் பாக்கியவான்கள்

- தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும் கைக் கொள்ளுகிறவர்களும் (1:3)
- கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் (14:13)
- முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவான் (20:6)
- தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் (22:7)
- அவருடைய கற்பனையின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் (22:14)

சிறுவர் பகுதி

# பாபேல் (ஆதி11:1-9)

Bro. ஏபில் நாயகம்

எனக்குப் பிரியமான சிறு பிள்ளைகளே, உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் சுகமாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். முழு ஆண்டுத் தேர்வுகள் முடிந்து விடுமுறை நாட்களில் ஜாலியாக இருக்கிறீர்களா? சரி, உங்கள் நேரத்தை அதிகம் எடுத்துக் கொள்ளாமல், பாடத்திற்கு நேராக உங்களை அழைத்து செல்கிறேன் வாருங்கள்.

ஆதி. 11:1-9 வரை உள்ள வசனப்பகுதியை வாசியுங்கள். வாசித்து விட்டீர்களா? சரி, இந்த வசனப்பகுதியிலே நோவா காலத்திலே வந்த ஜலப்பிரளயத்திற்கு பின்பு வந்த ஜனங்கள் (அதாவது நோவாவின் சந்ததியார்) அனைவரும் **ஒரே இடத்திலே** கூடி, அங்கே தங்கி ஒரு நகரத்தையும், வானத்தை எட்டும் அளவிற்கு ஒரு கோபுரத்தையும் கட்ட திட்டம் போட்டார்கள். அதற்காக அவர்கள் செங்கற்களை செய்யவும் ஆரம்பித்து விட்டார்கள்.

இதைப் பார்ப்பதற்கு கர்த்தர் இறங்கினார் (வ:5). இறங்கின கர்த்தர் அவர்கள் பேசின **ஒரு** பாஷையை **பல** பாஷைகளாக தாறுமாறாக்கிப் போட்டார். ஏன் கர்த்தர் அப்படி செய்தார் என்ற கேள்வி உங்களுக்கு வருகிறதா? ஜனங்கள் தங்களுக்கென்று ஒரு நகரத்தைக் கட்டுவது அவ்வளவு பெரிய குற்றமா என்று நீங்கள் கேட்கிறீர்களா? ஆம், குற்றம் தான். ஏன் என்ற கேள்விக்குப் பதிலை பெற தொடர்ந்து படியுங்கள்.

ஆதி 9:1 வது வசனத்தில், **பின்பு தேவன் நோவாவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்து நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்** என்று அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். ஆனால், ஆதி 11:4-வது வசன்தில் ஜனங்கள் என்ன நினைத்தார்கள் என்று வாசியுங்களேன்!

ஆம், **நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாத படிக்கு நமக்கு ஒரு நகரத்தை கட்டுவோம்** என்று சொல்லிக்கொண்டார்கள். தேவன் அவர்களுக்குச் சொன்னது **“பூமியை” நிரப்புங்கள்”** என்று. ஆனால் இந்த ஜனங்கள் நாம் பூமியெங்கும் சிதறிப் போகாமல் ஒரே இடத்தில் இருக்கலாம் என்று திட்டம் போட்டார்கள். குழந்தைகளே, இப்பொழுது சொல்லுங்கள், இந்த ஜனங்கள் செய்தது சரியா? அல்லது தவறா? கண்டிப்பாகத் தவறுதான். ஏனென்றால், தேவன் ஒன்றைச் சொல்லியிருக்க இவர்கள் அதற்குக் கீழ்படியாமற் போனார்கள்.

எனவே, தேவன் அவர்கள் பாஷைகளைத் தாறுமாறாக்கினார். அதன் பின்பு என்ன ஆனது? வச.9-ல் **கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்போக பண்ணினார்** ஆம், தேவன் தம்முடைய யோசனைகளையும், தாம் திட்டமிட்டதையும் நிறைவேற்றினார். தேவன் பாஷைகளைத் தாறுமாறாக்கினபடியால் அந்த இடம் **பாபேல்** எனப்பட்டது.

இதிலிருந்து நம் தேவனைப் பற்றி நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் என்ன? முதலாவது பாடம், அவர் தம்முடைய மனதிலே நம்மைப்பற்றி ஒரு திட்டம் வைத்திருக்கிறார். இரண்டாவது, அவருடைய திட்டங்களுக்கும், வசனங்களுக்கும், நாம் கீழ்ப்படிய வேண்டும். மூன்றாவது, நாம் அவருடைய திட்டத்தையும் அவருடைய வசனங்களையும் மீறினால் நம்மைக் கண்டித்து, அவருடைய திட்டங்களுக்கு நம்மை கீழ்ப்படிய வைக்கிறார். ஏசா 55:9-ல் **பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும் உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது** என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எனவே பிள்ளைகளே!நாம் தேவனுக்கும் அவருடைய வசனங்களுக்கும் கீழ்ப்படிவதை விட உத்தமமான காரியம் வேறொன்றும் இருக்க முடியாது. எனவே, நாம் தேவனுக்கும் அவருடைய வசனங்களுக்கும் முழுமையாகக் கீழ்ப்படியும்பொழுது தேவன் நம்மை நிச்சயம் ஆசீர்வதிப்பார். ★

## தேவை ஒரு நிமிடமே

- **நின்று** நீங்கள் கடந்து போகிற புதியவரிடம் "ஹலோ" என்று சொல்லி சில வார்த்தைகளைப் பேசுவதற்கு
- **அறிமுகம் செய்ய** இது தேவையற்றதாக இருக்கலாம், ஆனால், இது நட்பை நிரூபிக்கும்
- **கடிதம் எழுத** வியாதியாயிருக்கிற ஒருவருக்கு, அல்லது குடும்ப அங்கத்தினரை இழந்து போன ஒருவருக்கு
- **எடுக்க** தொந்தரவுகளை எடுத்துவிட்டு, மற்றவர்களைப் பற்றி நமக்குத் தெரிந்த நல்ல காரியங்களைப் பரப்புவதற்கு
- **தூக்கி நிறுத்த** தாழ்வாக உணர்கிற ஒருவரையோ அல்லது கவலையாகவோ, சோர்வாகவோ காணப்படுகிற ஒருவரை தூக்கி நிறுத்த

## வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை ஏப்ரல் மாத இதழில்)**

1. உபாகமத்திலுள்ள அதிகாரங்களும் வசனங்களும் எத்தனை?
2. ஆசீர்வாதம் எத்தனை மடங்கு என்று மோசே சொன்னார்?
3. சேயீர் மலைநாடு யாருடைய சுதந்திரம்
4. தேசத்தைக் கடந்துபோக உத்தரவு கொடுக்காத ராஜா யார்?
5. தேவனுடைய கற்பனைகளைக் கைகொள்ளுகிறவர்களுக்குக் கிடைக்கும் பலன் என்ன?
6. அடிமைத்தன வீடு எது?
7. துரத்தப்படும் ஜாதிகள் எத்தனை?
8. அடைக்கலப் பட்டணத்தில் பேசேர் யாருடைய சுதந்திரம்
9. விக்கிரகங்களை உண்டாக்காமல் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் ஏன்?
10. எந்தக் கொடுமுடியில் ஏறி மோசே ஏறிட்டுப் பார்த்தார்?

(உபாகமத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்)

### பிப்ரவரி மாத வினாக்களுக்கான விடைகள்

1. இஸ்ரவேலிலிருந்து (எண்.24:17)
2. முதலாம் மாதம் பதினாலாம் தேதி (28:16)
3. பாகால் பேயோரை பற்றிக் கொண்டதால் (25:3)
4. இஸ்ரவேல் புத்திரர் (35:34)
5. மக்லாள், திர்சாள், ஒக்லாள், மில்காள் (36:11)
6. ஆறு (35:6)
7. நாற்பது வருஷம் (32:13)
8. மூன்று முறை (24:10)
9. பினெகாஸ் (25:11,12)
10. எலேயாசார், யோசுவா (34:17)

### சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

1. N. இந்திரா ஜெபக்கனி – தூத்துக்குடி
2. M. செல்வம் – கோவை
3. R. பாக்கியம், ராஜேஷ் – சென்னை
4. S. சாந்தகுமாரி – நாசரேத்
5. N. ஜெபத்தாய் – நாசரேத்
6. செல்வமணி குணசேகரன் – சென்னை
7. S. ஜோதி சுரேஷ் – திருச்சி
8. A. பிலோமினா – கோவை
9. R. பாரதி – கோபி
10. K. ஜெயசிங் – சென்னை
11. K. இம்மானுவேல், ஈஸ்வரி – பவானி
12. J. ஜெமீலா செல்லையா – நெல்லை
13. S. ஜெயராஜ் – கோவை
14. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
15. J. ஜான்சி – ஆனைமலை
16. மரகதம் திரவியம் – தேனி
17. G. சாமுவேல் மோகன்தாஸ் – சென்னை
18. V.C. ரூபவல்யா – நாசரேத்
19. T. சத்தியசீலன் – கோவில் பட்டி
20. G. பாக்கியம் சம்பூரணம் – ஈரோடு
21. J. மாலதி ஜெயக்குமார் – மூலனூர்
22. J. அபினேஷ் – மூலனூர்
23. K.S. மாணிக்கவாசகம் – திருச்சி
24. S. ஆதாள் – கோவில்பட்டி
25. V.S.S. பால்ராஜ் – மதுரை
26. மாலதி ஜெயசெல்வம் – சீர்காழி

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி : இப்பூமியில் வாழும் ஒரு பாவியை தேவன் எப்படி தன் பக்கமாக இழுத்துக் கொள்கிறார்?**

**பதில் :** மத உலகம் இக்கேள்விக்கு வெவ்வேறு பதில்களை வைத்திருக்கிறது. அதில் பொதுவாக, இரண்டு முக்கியமான கருத்துக்கள் இது பற்றி இருக்கின்றன. அதில் ஒன்று, தேவனும் பரிசுத்த ஆவியானவரும் ஒரு பாவியின் இருதயத்தில் நேரடியாகக் கிரியை நடப்பித்து பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்தி நேரடியாக இடைப்பட்டு அவனை இரட்சிக்கிறார். மற்றொன்று, தேவனும் ஆவியானவரும் ஒரு முகவர் மூலமாக பாவியின் இருதயத்தில் கிரியை செய்கிறார் என்பதாகும். ஆனால், வேத வாக்கியங்கள் இது பற்றி குறிப்பிடும் காரியங்களை நாம் சற்று உற்று நோக்குவோம். யோவான் 6:44ல், இயேசு சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள். என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன் என்றார். இப்போது நம்டைய கேள்விக்கான பதிலுக்கு அடுத்த வசனத்தைப் பாருங்கள் இயேசு சொன்னார். எல்லோரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று இங்கே, மனிதர்கள் எப்படி கிறிஸ்துவின் மூலமாகப் பிதாவினிடத்தில் இழுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், அவர்கள் இயேசு கிறிஸ்துவை இரட்சகரென்றும் கர்த்தரென்றும் தேவனுடைய வார்த்தைகள் மூலமாக அவரை விசுவாசிப்பதால் தேவன் அவர்களைத் தன் பக்கமாக இழுத்துக் கொள்கிறார்.

அதாவது தேவனுடைய வார்த்தைகளை ஒரு பாவியான மனுஷன் கேள்விப்படும்போது அவன் அதை விசுவாசிக்க வேண்டும். அதினிமித்தம் தன் பாவங்கள் கண்டித்து உணர்த்தப்படும்போது தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு தன்னுடைய கீழ்ப்படிதலை ஞானஸ்நானத்தின் மூலமாக வெளிப்படுத்தும் போது மாத்திரமே அம் மனிதன் தேவனால் இழுத்துக்கொள்ளப்படுகிறார். இதற்கு மாறான செயல் இவ்வுலகில் வேறெதுவுமே இல்லை (ரோமர் 10:14,15).

ஆகையால், கிறிஸ்துவின் உபதேச வார்த்தைகள் அடங்கிய நற்செய்தி இல்லாமல் ஒரு பிறவி இரட்சிக்கப்பட முடியாது. ஆதலால், இரட்சிக்கும் விசுவாசம் தேவனிடத்திலிருந்து நேரடியாக வருவதில்லை. மாறாக அவ்விசுவாசம், தேவனுடைய வார்த்தையை ஒருவர் கேட்டு அதை விசுவாசித்து அதினிமித்தம் அவர் பாவம் கண்டித்து உணர்த்தப்படும் போது அவருக்குள் வரும் மாற்றத்தின் மூலமாகவே தேவன் செயல்படுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் இதுகுறித்துக் குறிப்பிடும்போது, **கிறிஸ்துவின் சுவிசேத்தைக் குறித்து நான் வெட்கப்பட்டேன்; அது இரட்சிப்பு உண்டாவதற்குத் தேவ பெலனாயிருக்கிறது என்றார்** (ரோமர் 1;16). **அதேபோல், யாக்கோபு ஆசிரியரும் நம் உள்ளத்திலே நாட்பட்டதாயும் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ள தாயுமிருக்கிற வசனத்தைச் சார்ந்த மாய் ஏற்றுக்கொள்ள வேண்டும்** என்று நம்மை உற்சாகப்படுத்துகிறார். (யாக்கோபு 1;21). ஆகையால், தேவனுடைய ஆவி உங்கள் இருதயங்களில் அற்புதவிதமாகக் கிரியைச் செய்கிறார் என்னும் அனுபவத்திற்குள்ளாக நீங்கள் கடந்து சென்று விட்டதாக உங்களை நீங்களே வஞ்சித்துக் கொள்ளவும் வேண்டாம். சொப்பனங்கள், தரிசனங்கள், தீர்க்கதரிசனங்கள், மற்றும் உணர்வுகளையும் சார்ந்திருக்க வேண்டாம். அதற்குப் பதிலாக 1 பேதுரு 1:23-ல் உள்ளபடி, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்படத் தீர்மானியுங்கள்.

★

# விசுவாசமா அல்லது உணர்வா?

Bro. Frank Chesser

**நீ**ங்கள் விசுவாசத்தால் நடக்கிறீர்களா அல்லது உணர்வுகளால் நடத்தப்படுகிறீர்களா? நீங்கள் இக்கேள்விக்கு எப்படி பதிலளிக்கப் போகிறீர்கள் என்பது உங்கள் நித்திய வாழ்வை நிர்ணயிக்கும். நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? அநேக மக்கள் நான் என் இருதயத்தில் உணர்கிறேன் என்று இந்த கேள்விக்கு பதிலளிக்கிறார்கள். இரட்சிப்பு போன்ற மிக முக்கியமான ஒன்றை ஒருவர் வெறும் உணர்வின் அடிப்படையில் அனுமதிப்பது மிகவும் துக்கமானது. வாழ்க்கையின் எந்தப் பகுதியிலும் ஒரு குறிப்பிட்ட காரியம் சரியனதா அல்லது தவறானதா என்பதைத் தீர்மானிக்க அடிப்படை அளவுகோலாக உணர்வை எந்த ஒரு நபரும் அனுமதிப்பதில்லை.

உதாரணமாக, ஒருவர் **உணர்வுகளைக் கொண்டு** கேக் செய்வதில்லை. மாறாக, கேக் செய்வதற்கு என்னென்ன பொருள்கள் பயன்படுத்தப்பட வேண்டும், பொருள்களின் சரியான அளவு, ரொட்டி சுடுவதற்கு தேவையான சூடு போன்உறவைகளை அறிய செய்முறை ஆலோசிக்கப்படுகிறது. ஒரு கட்டிட மேஸ்திரி, “உணர்வுகளைக் கொண்டு” ஒரு கட்டிடத்தைக் கட்ட முயற்சி செய்ய மாட்டார். மாறாக, அந்த வீடு சரியாக எப்படி கட்டி முடிக்கப்பட வேண்டும் என்பதை அறிவதற்காக அதன் மாதிரியை கேட்பார். அதுபோல ஒருவர் ஓர் இடத்திற்கு பிராயணம் செய்ய வேண்டுமென்றால் வயல் வெளி வழியாக சுற்றித்திரிய விரும்ப மாட்டார். மாறாக, எப்போது வலது பக்கம் திரும்ப வேண்டும் என்பதை அறிவதற்காக சாலை வரை படத்தை நாடுவார்.

இதை மத சம்மந்தமான காரியங்களுக்குப் பொருத்திப் பார்க்க அநேக மக்கள் விரும்புவதில்லை. அது அவர்களால் முடிவதில்லை. **நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க வேண்டும்** என்று கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (1கொரி.5:6). நம் விசுவாசத்தின் ஒரே ஆதாரம் தேவனுடைய வார்த்தைகள் தான் (ரோமர்10:17). எனவே, விசுவாசித்து நடப்பதென்பது தேவனுடைய வார்த்தைகளின்படி நடப்பதாகும். ஒரு செயல் தேவனுடைய வார்த்தையால் அங்கீகரிக்கப்படவல்லையென்றால் அச்செயலில் ஈடுபடக்கூடாது. தேவனுடைய வார்த்தை தான் தெய்வீக செய்முறை, மாதிரி அல்லது வரைபடமாயிருக்கிறது.

ஒருவர் தான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்று உணர்வதால் மாத்திரம் அவர் இரட்சிக்கப்பட்டு விட்டார் என்று அவரால் அறிந்து கொள்ளவும் தன்னுடைய ஆராதனையை தேவன் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என தான் உணர்வதால் மாத்திரம் அந்த ஆராதனையை தேவன் ஏற்றுக் கொண்டு விட்டார் என்று சொல்ல முடியாது. அதுபோல, ஒருவர் பரலோகத்திற்கான பாதையில் சென்றுகொண்டிருக்கிறார் என்று அவருடைய **உணர்வை** அடிப்படையாக வைத்து அறிந்து கொள்வதும் முடியாத காரியம். தேவனுடைய வார்த்தை நம் வரைபடமாக மாதிரியாக இருக்கிறபடியால் நாம் அதன் ஆலோசனைப்படி செயல்பட வேண்டும். மோசே அந்தக் கூடாரத்தைக் கட்ட தெய்வீக மாதிரியின்படி செய்ய எச்சரிக்கையாயிருந்தது போல, நம் ஆவிக்குரிய ஜீவியங்கள் கட்டப்பட தெய்வீக மாதிரியைப் பின்பற்ற நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

சாட்சியங்களை நம்புவது மற்றும் ஏற்றுக்கொள்வதின் விளைவாகவே உணர்வுகள் ஏற்படுகிறது. உதாரணமாக, ஒரு மனிதனுக்கு தன்னுடைய பிரியமான ஒருவர் வாகன விபத்தில் இறந்து விட்டதாகச் செய்தி அனுப்பப்படுகிறது. உடனடியாக அவர் துக்கத்தால் நிறைந்து விடுகிறார். சிறிது நேரத்திற்குப் பிறகு, அவருக்குப் பிரியமானவர் உயிரோடு நன்றாக இருப்பதாக மீண்டும் செய்தி வருகிறது. உடனடியாக அவருடைய உணர்வுகள் மாற்றத்திற்குட்பட்டு சந்தோஷத்தால் நிறைந்து காணப்படுவார். உணர்வுகள், ஒருவர் பெற்றுக்கொள்கிற தகவல் அல்லது, சாட்சியத்தின் தன்மைக்கேற்ப மாறக் கூடியவைகளாக இருக்கின்றன. ஒருவருக்கு துக்க செய்தி வந்து அவர் அதை நம்பினால் அந்தச் செய்தி சரியா, தவறா என்பதைப் பற்றி பொருட்படுத்தாமல் அவர் துக்கமாகக் காணப்படுவார். இதனால் தான் அனுதின வாழ்விலும் மத சம்மந்தமான காரியங்களிலும் உணர்வுகள் நம்பத் தகுந்தவைகளாக இல்லை.

அநேக மக்கள் மதசம்மந்தமான காரியங்களில் தவறாக இருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் தங்கள் உணர்வுகளை தங்கள் வழிகாட்டியாக இருக்க அனுமதித்திருக்கிறார்கள். அவர்களின் உணர்வுகள் தேவனுடைய வார்த்தையோடு இசைவாக இல்லாத உபதேசத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒருவர், தான் தவறில் இருந்து கொண்டு சத்தியத்தில் பாதுகாப்பாக இருப்பதாக உணர முடியும். பவுல் கிறிஸ்தவராவதற்கு முன்பு பக்தியுள்ள பரிசேயனாக இருந்தார். அவர் தம்மைப் பற்றி இவ்விதமாக விவரிக்கிறார். .... முன்னோர்களுடைய வேதப் பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டு, இன்றையத்தினம்

நீங்களெல்லாரும் தேவனைக்குறித்து வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறதுபோல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன் என்றும் (அப்.22:3). எல்லா விஷயங்களிலும் நல் மனசாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்ததாகவும் (அப்.23:1). தான் ஆவிக்குரிய பிரகாரமாக பாதுகாப்பாக இருப்பதாகவும் சரியாக இருப்பதாகவும் உணர்ந்தார். ஆனால், அவர் தவறான போதனையில் இருந்தார். உணர்வுகளினால் தொடர்ந்து நடக்க, பவுல் தீர்மானித்திருந்தால் அவர் ஒரு போதும் யூத மார்க்கத்தைத் துறந்து கிறிஸ்தவத்தைத் தழுவியிருக்கமாட்டார்.

**விசுவாசித்து நடப்பது** என்பதின் பொருள், ஒருவன் தேவனை விசுவாசிப்பது, கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை விசுவாசிப்பது என்பதை விட அதிகமான காரியங்களை உள்ளடக்கியது. பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன (யாக். 2:19). இயேசு தன் மீது விசுவாசம் வைத்த குறிப்பிட்ட யூதர்களிடம் பேசினார் (யோவான் 6:30). ஆயினும், பின்பு இதே யூதர்களை அவர் பிசாசின் பிள்ளைகள் என்று சொல்கிறார் (யோவான் 8:44), ஏனென்றால், அவர்கள் தங்கள் விசுவாசத்தை தேவனுடைய வார்த்தைகளுக்கேற்ப கிரியையாக மாற்றவில்லை. யூதர்களின் பிரதான அதிகாரிகள் அநேகர் கிறிஸ்துவை விசுவாசித்தார்கள் "…. அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள் (யோவா. 12.42,43). அகிரிப்பா ராஜா கிறிஸ்துவைக் குறித்து தீர்க்கதரிசிகள் சொன்ன காரியங்களை விசுவாசித்தான். ஆயினும், அவன் கிறிஸ்தவனாக மாறத் தவறிவிட்டான்
(அப்.26:27,28). ஆதலால் மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே (யாக்.2:24). கீழ்ப்படிகிற விசுவாசமே இரட்சிக்கிற விசுவாசமாயிருக்கிறது. அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்(கலா. 5:6). ஒருவர் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமானால் கீழ்ப்படிகிற விசுவாசம் பெற்றிருக்க வேண்டும் (ரோம.16:26).பரலோக ராஜ்யத்தில் யார் பிரவேசிப்பார்? இயேசு இவ்விதமாக பதில் சொன்னார் **பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின் படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பான்** என்று (மத்.7:21). இரட்சிப்பு ஒரு குறிப்பிட்ட சாராருக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட சாரார் அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களே (எபி.5:9).

கீழ்ப்படிகிற விசுவாசத்தில் தேவனுடைய சித்தத்திற்கு மனிதன் பதிலளிக்கும்போது, அதன் விளைவாக தெய்வீகக்கிருபையாலும், கிறிஸ்துவின் இரத்தத்தாலும் மனிதன் இரட்சிக்கப்படுகிறான். தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படியும் போது, மனிதன் தேவ கிருபையினாலே இரட்சிப்பை அனுபவிக்கிறான். இவ்விதமாக அவன் மிகப்பெரிய உணர்வுக்குள்ளாக கடந்து வருகிறான். ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய இரட்சிப்புக்கு உணர்வுகளை **நிரூபணமாகவோ** அல்லது **ஒரு சாட்சியாகவோ** கேட்டுக் கொள்வதில்லை. அவன் வேதத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற தெய்வீக சத்தியத்திற்கும் அந்த சத்தியத்திற்கு இசைவாயிருப்பதையுமே கேட்டுக் கொள்கிறான். ஏனெனில், **சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** (யோவா 8:32). ஆயினும், ஒருவர் கீழ்ப்படிகிற விசுவாசத்தில் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும்போது தேவனுடைய கிருபையால் இரட்சிப்பை அனுபவிக்கிறார். அது அவருக்கு நிச்சயமாக நல்ல உணர்வை ஏற்படுத்துவதற்குப் போதுமான காரணமாயிருக்கிறது.

நீங்கள் **விசுவாசத்தினால்** நடக்கிறீர்களா அல்லது **உணர்வுகளால்** நடக்கிறீர்களா? போதிக்கப்படாத இருதயம் **...திருக்குள்ளதும் மகாகேடுள்ளதுமாயிருக்கிறது" (எரே.17:19). "தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்** (நீதி.28:26) என்று ஞானி சாலமோன் கூறியுள்ளார். எனவே, உங்கள் நம்பிக்கையை தேவனிடத்திலும், அவருடைய வார்த்தையினிடத்திலும் வையுங்கள். மாறும் தன்மை கொண்ட மனித உணர்வுகளின் மீது வைக்காதீர்கள். ஏனென்றால் உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்!. ★

## பாவத்தைப்பற்றிய உண்மை

- இயற்கை அதை அறிவிக்கிறது! ஏனென்றால், அது அதன் சாபத்திற்குள்ளாகி இருக்கிறது (ஆதியாகமம் 3 : 17).
- மனிதன் அதை ஒத்துக்கொள்கிறான் நான் பாவம் செய்தேன் ( லூக். 5 : 2).
- நியாயப்பிரமாணம் அதைக் கண்டறிந்திருக்கிறது இப்படியிருக்க பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமானத்தினால் வருகிறது (ரோமர் 3 : 20).
- கிறிஸ்து அதை வெளிப்படுத்தியிருக்கிறார் பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் (யோவான் 8 : 34).

# ஒன்றான மெய்த்தேவன்

Bro. ஆறுமுகம்

சென்ற இதழ் தொடர்ச்சி

இப்படி ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கும் அந்நிய தெய்வங்களாகிய சொரூபங்களுக்கும் எபிரேய மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாடு விளக்கமளிக்கிறது. பன்மையில் பேசும் ஒருமைக்கு **ஏலோஹிம்** தனித்துக்காட்டும் ஒருமைக்கு **ஏல்** முறையே எபிரேய சொல் அகராதி எண் 430,410 பயன்படுத்தப்பட்டுள்ளது. அவைகளின் தனித்துவ நபரைக் குறிப்பிட எபிரேய எண் 433 குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணம் உபாகமம் 32:15ல், **யெஷூரன்** (இஸ்ரவேல்) **தன்னை உண்டாக்கின தேவனை விட்டு, தன் இரட்சிப்பின் கன்மலையை அசட்டை பண்ணினான்**. என்பதில் தேவனை என்பதற்கு ஒருமைச்சொல்லாகிய 433 பயன்படுத்தப்பட்டுள்ளது. பிதாவாகிய தேவனையோ, இயேசுவையோ, பரிசுத்த ஆவியையோ தனி நபராகக் குறிப்பிடுகிறபோது மட்டும் 433 பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக புதிய ஏற்பாட்டில் பிதாவாகிய தேவனுக்கும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் **தேவன்** என்ற வார்த்தை 2316 – கிரேக்கமொழி, சொல் அகராதி, பரிசுத்த ஆவியை தேவன் என்று குறிப்பிடவும் 2316 (அப்.5:4; யோவான் 1:1,2), அப்போஸ்தலர் 5:3 ல் பரிசுத்தாவி, குமாரனாகிய கிறிஸ்து, பிதாவாகிய தேவன் மூவருக்கும் **தேவன்** என்று குறிப்பிட கிரேக்க எண் 4151 குறிப்பிடப்படுகிறது. இவைகள் ஒருவேளை உங்களுக்கு குழப்பமாக இருக்கலாம். ஆனால் பொதுவாக ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டியதன் சுருக்கம் வருமாறு.

**ஏல்** – ஜீவனுள்ள தேவனையும் விக்கிரக தெய்வத்தையும் குறிப்பிட்டு ஒருமையிலும் பன்மையிலும் பேசுகிறது. எபிரேய எண் 410

**ஏலோஹிம்** – எபிரேய எண் 430 மேற்குறித்த பன்மை கருத்தையே வெளிப்படுத்துகிறது.

**ஏலோ அ** – ஜீவனுள்ள தேவனுக்கும் விக்கிரக தேவனுக்கும் ஒருமைத் தனித்துவத்தை குறிப்பிடுகிறது. எபிரேய எண் 433.

**பென்யுமா** – ஆவி என்று மூச்சுக் காற்று, காற்று, (அசுத்த)ஆவி, (தேவனாகிய) ஆவி, கிறிஸ்துவனாகிய ஆவி, பரிசுத்த ஆவி, அனைத்தையும் குறிப்பிடுகிற வார்த்தை கிரேக்க எண் 4151.

**தியோஸ்** – பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூவருக்கும் சமமாக குறிப்பிடும் தேவன் என்னும் பதம் கிரேக்க எண் 2316

தகப்பன் – மகன், தேவன் – ஆவி போன்ற வித்தியாசமே அன்றி வேறே வித்தியாசத்தை மூலமாக குறிப்பிடுவதில்லை. இயேசு தாமே தம்மை தேவனுக்கு சமமானவர் என்று குறிப்பிடுவதாலும் (யோவான் 5:18–26) இணையாக பரிசுத்த ஆவியானவரும் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்கிற அளவுக்கு செயல்படுவதாலும் வேறே வித்தியாசங்கள் எதுவுமில்லை என்பது தெளிவு (1 கொரி. 2:10).

எனவே, உபாகமம் 6:4ல் பேசப்படும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் என்பது பன்மையில் பேசப்படுகிற ஒருமைச் சொல்லாகிய **ஏலோஹிம்** (எபி.எண்430), எனத் தெளிவு படுத்துகிறது. ஆக, பன்மையில் பேசும் ஒருமை ஒருவரே முப்பரிமாணங்களைப் பெற்று வந்ததற்கான ஆதாரமாகாது. மூவரும் மூன்று வித்தியாசப்பட்ட நபர்கள்தான்.

திரித்துவ கோட்பாட்டாளர்களுக்காண பதிலடி அடுத்த பாடத்திலும் தொடரும்.

# FORM IV – DECLARATION

**Statement about ownership and other particulars about the newspaper Thirumarai Aasaan**

| | | |
|---|---|---|
| 1. Place of publication | - | Kangayam |
| 2. Periodicity of Publication | - | Monthly |
| 3. Printer's name | - | K.C. Senthil kumar |
| 4. Address | - | 50, Kovai road, Kangayam |
| 5. Nationality | - | Indian |
| 6. Publisher's name | - | S. Rajanayagam |
| 7. Address | - | 86-A, Dharapuram road, Kangayam - 638701. |
| 8. Editors Name | - | S. Rajanayagam |
| 9. Address | - | 86-A, Dharapuram road, Kangayam - 638701. |

**I, S. Rajanayagam, here by declare that the particulars given above are true to the best of my knowledge and belief.**

**Date : 20.03.2018** **Publisher**

## நான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால்....

**நான்** நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன் - பாவங்கள் முற்றிலும் மன்னிக்கப்பட்டிருக்கிறது (ரோமர் 5:1)

**நான்** இனி பாவத்துக்கு ஊழியம் செய்யாதபடிக்கு கிறிஸ்துவுடன் கூட மரித்திருக்கிறேன் (ரோமர் 6:6)

**நான்** ஆக்கினைக்கு நீங்கலாயிருக்கிறேன் (ரோமர் 8:1)

**நான்** தேவ செயலின்படியாக இயேசுவுக்குட்பட்டிருக்கிறேன் (1 கொரி. 1:30)

**நான்** தேவனால் அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியைப் பெற்றிருக்கிறேன் (1கொரி.2:12)

**நான்** கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றிருக்கிறேன் (1 கொரி. 2:16)

**நான்** கிரயத்துக்குக் கொள்ளப்பட்டிருக்கிறேன். நான் என்னுடையவனல்ல. நான் தேவனுக்குச் சொந்தமானவன் (1 கொரி. 6:19, 20)

**நான்** வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் முத்திரையிடப்பட்டிருக்கிறேன். ஆவியானவர் என்னுடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார் (எபே. 1:13,14)

**நான்** மரித்திரிக்கிறபடியால் நான் இனி எனக்காக வாழாமல் எனக்காக மரித்தவருக்கென்று பிழைத்திருக்கிறேன் (1 கொரி. 5:14,15)

**நான்** கிறிஸ்துவுடனே சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் (கலா.2:20)

**நான்** ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களிலும் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறேன் (எபே. 1:3)

**நான்** அவருக்கு முன்பாகப் பரிசுத்தமுள்ளவனும், குற்றமற்றவனாகவும் இருக்கும்படியாக உலகத் தோற்றத்துக்கு முன்னே தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறேன் (எபே. 1:4)

**நான்** கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறேன் (எபே. 2:5)

# பயப்படாதே என்கிறார்! பயப்படேன் என்பாயா?

Bro. பாண்டியன்

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக. நாம் அநேக விஷயங்களில் பயமும் தயக்கமும் நிறைந்தவர்களாய் இருக்கிறோம். ஆனால், வேதம் சொல்லுகிறது, தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கெடாமல் பலமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். பலமான ஆவியை பெற்ற விசுவாசிகள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதற்கு வேதத்தின் ஆலோசனையை இதில் காண்போம். பொதுவாக மனுஷருக்கு பயம் வரக் காரணம் 1. பாவம் 2. எதிர்காலக் கவலை 3. நோய்கள் போன்றவை வேதத்தில் தேவனுடைய சார்பாக மனிதனுக்கு **பயப்படாதே** என்று நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் நேரடியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதாமே நீ எங்கே இருக்கிறாய் என்று தேவன் கேட்டபோது அவன், **நிர்வாணியாய் இருப்பதினால் பயந்து ஒளிந்து கொண்டேன்** என்றான். ஆகவே, ஒருவன் தேவனுடையக் கட்டளையை மீறி நடக்கும்போது, பயப்படுகிற சூழ்நிலை வருகிறது. எதிர்காலத்தைக் குறித்துக் கவலைப்படாதபடிக்கு ஆண்டவர் காட்டு புஷ்பங்கள், ஆகாயத்துப் பறவைகள் உதாரணம் வழியாக நம்மை உணர்த்தியதை நாம் அறிவோம். மாறாக, ஐசுவரியம் பெருகும்போது வேதனையும் பெருகும் என்பதும், அதை வேண்டியவர்களுக்கு பகிர்ந்தளிக்கும்போது பலனை அடைவாய் என்பதும் வேதத்தின் அறிவுரையாகும்.

நோய்களைப் பற்றிய பயங்கள் தற்போது மனிதருக்கு அதிகரித்திருக்கிறது. முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தைத் தேடாமல் பணத்தைத் தேடி ஓடுவதால் சிந்தனைகள் கெட்டு, உறக்கம் இன்றி, நல்ல உணவு உட்கொள்ள முடியாமல், குடும்ப உறவுகள் சீர்கெட்டு, மனிதனுக்கு பலவித நோய்களினால் பாதிப்பு வருகிறது. ஆனால், தேவனுக்குக் கவனமாகச் செவிகொடுத்து அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டால் **மற்றவர்களுக்கு வரும் வியாதிகளை உனக்கு வராதபடி காத்துக் கொள்வேன் என்றும், நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றும் நம் தேவன் சொல்லியிருக்கிறார்** (யாத். 15:26) ஆனால், இன்று மனிதன் கர்த்தரை விட்டு வெறும் மருந்து மாத்திரைகளே பரிகாரமாக நினைப்பதினால் அவன் நோய்களினால் பயந்து பயந்தே சாகிறான். தேவனை முழுஇருதயத்தோடு நம்பின தாவீது சொல்கிறார், **நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்** சங்கீதம் 23ல் ஒரு ஆடு தன் மேய்ப்பன் மீது நம்பிக்கை வெளிப்படுத்துகிறது. பொல்லாத மிருகங்கள் நிறைந்த காட்டில் இருளில் நடந்தாலும் பயப்படேன் என்றதற்குக் காரணம் தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர் என்ற தைரியம் ஆகும். உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும் என்பது வேதத்தில் உள்ள வசனமும் சாட்சிகளும் **நம்மைத் தேற்றுகிறது** என்பதைக் குறிக்கிறது.

பல நேரங்களில் நாம் நம்முடன் இருக்கும் தேவப் பிதாவை மறப்பதினால் பலவித பயங்களுக்கு ஆளாகிறோம். அதை ஞாபகப்படுத்தவே நாம் வாரந்தோறும் கூடிவரும்படியும், அப்போது அவருடைய ஆலோசனைகள் நம்மைத் தேற்றும் படியாகவும் தேவன் திட்டம் வைத்திருக்கிறார். சபைக்கூடி வருவதலை விட்டுவிடாதிருங்கள் என்பது நம்முடைய ஆறுதலுக்காகவே!

**நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர், உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும்** (138:7) என்று சங்கீதக்காரன் நம்புகிறான். மேலும், எனக்கு விரோதமாகப் படையெடுத்து வருகிற பதினாராயிரம் பேருக்கும் பயப்படேன் என்றான் தாவீது சங். 3:4-6) காரணம் தூங்கி விழித்து **கர்த்தர்** என்னைத் தாங்குகிறார் என்கிறான். இப்படிப்பட்ட நம்பிக்கையை நம் இருதயத்தில் வளர்த்துக்கொள்ளும் போதுதான் **பயப்படேன்** என்று நம்மால் தைரியமாக அறிக்கை பண்ணமுடியும்! சங்கீதக்காரனுக்குப் பின்பு, சுமார் முந்நூறு ஆண்டுகள் கழித்து வந்த ஏசாயா தீர்க்கன் மூலம் தேவன் மறுபடியும் சொல்லுகிறார். **நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன். நான் உன் தேவன், நான் உன்னைப் பலப்படுத்தி, உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்** (ஏசா.41:10) பிதாக்களின் காலத்திலும், நியாயப்பிரமாண அல்லது மோசேயின் காலத்தில் மட்டும் அல்ல, இப்போது கிறிஸ்துவின் காலத்திலும் மனிதன் பயந்து கொண்டுதான் இருக்கிறான். **பயம் விசுவாசத்தின் எதிரி; அதை பிசாசு கொண்டு வருகிறான்.** யோபுவுக்கு பொருளாதார மற்றும் உறவுகள் இழப்புகள் மூலம் பிசாசு பயமுறுத்தியும், யோபு பொறுமையுடனே தேவன் மீது விசுவாசம் வைத்தார். நாமும் நமக்கு உதவி செய்ய ஆயத்தமாய் நம்முடன் இருக்கும் வேதனை விசுவாசித்து, பயங்களை மேற்கொள்ள வேண்டும். நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய் உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொல்லியிருக்கிறாரே; அதினால் நாம் தைரியங்கொண்டு கர்த்தர் எனக்கு சகாயர் மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே என்கிறார் எபிரெய ஆசிரியர். இருதயத்தின் நிறைவுதான் வாய் பேசும். நம் இருதயத்தில் பயங்கள் இருப்பதால் அதைப் பற்றியே நம் வாயின் வார்த்தைகள் சொல்லுகிறது. நம் பயங்களை அகற்றி கர்த்தர் மீது உள்ள நம்பிக்கையை நம் இருதயத்தில் வளர்த்து விசுவாசமுள்ள வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். அதுவே, ஒரு கிறிஸ்தவனின் உண்மையான வளர்ச்சியாகும். தேவன் பயப்படாதே என்று யாருக்கோ சொல்லவில்லை. உங்களுக்கும் எனக்கும்தான் சொல்லியிருக்கிறார். அதை நம்பி நான் பயப்படேன். தேவன் என்னுடன் இருக்கிறார். அவர் என்னைக் காத்து நடத்துவார் என்ற விசுவாச வார்த்தைகளை நாம் பேசும்போது, தேவன் அதைக் கவனித்துக் கேட்கிறார். (மல்.3:16) பிள்ளைகளின் மழலைமொழியாகிய பெற்றோர் ரசிப்பது போல் நம் விசுவாச வார்த்தைகளை தேவன் கவனிக்கிறார் என்பது எவ்வளவு பெரிய விஷயம்?

சங்கீதங்களில் நாம் கவனித்துப் பார்த்தால் தேவனின் நன்மைகளை நினைத்து துதிப்பதை அறியலாம். போன வாரத்தில் கூட நம் ஆசிரியர் E.Z.S.R தமிழன் T.V. யில் **தேவனின் நன்மைகளை நாம் மறந்து விடக்கூடாது** என்பதைப் பற்றிய ஒரு நல்ல செய்தியை நாம் பார்த்திருக்கலாம். தேவன் நம்மை மீட்டுக் கொண்டு அழைத்து, என்னுடையவன் என்று சொந்தம் கொண்டாடுவதால் நாம் பொல்லாப்புக்கு, பயப்படாதிருக்க வேண்டும். பிரச்சனைகளில் நாம் மூழ்கிக் கவலைப்படாமலிருக்கவே தேவன் விரும்புகிறார். **நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள்... சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்** (சங்.46:10,11) சபையில் இருப்பவர்களே உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன். மற்றும் சர்வ வல்லவருடைய நிழலிலே தங்குபவன். ஏனெனில், எபே. 2:7 ல் தேவன் நம்மைக் கிறிஸ்துவோடே கூட எழுப்பி அவரோட உன்னதங்களில் நம்மை உட்கார வைத்திருக்கிறார் என்று காண்கிறோம். ஆகவே, 9-1ம் சங்கீதத்தின் படி அவர் உன்னை பாழாக்கும் கொள்ளை நோய்க்குத் தப்புவிப்பார். தமது சிறகுகளாலே மூடி அடைக்கலம் தருவார். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது வாதை உன் கூடாரத்தை அணுகாது உன் வழிகளில் எல்லாம் காக்க தேவன் தம் தூதர்களை ஆயத்தப்படுத்தியுள்ளார். அவருடைய நாமத்தை அறிந்திருக்கிற உன்னை கர்த்தர் உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கச் சித்தமாய் இருக்கிறார். ஆகவே, பயப்படாதே என்கிறார்! பயப்படேன் என்போமாக!

**தேவ கிருபை நம்அனைவரோடுங் கூட இருப்பதாக.** ★

## நாளும் நடப்பும்

- **+2 பொதுத்தேர்வு - 2018 மார்ச் 7-ம் தேதி தொடங்கி ஏப்ரல் 6ம் தேதி நிறைவுபெறுகின்றன.**
- **நீட் தேர்வு உட்பட அகில இந்திய அளவில் நடத்தப்படும் எந்தத் தேர்வுக்கும் ஆதார் கட்டாயமில்லை.** **- உச்ச நீதிமன்றம்**
- **வரும் நிதியாண்டுக்கான (2018-2019) நிதிநிலை அறிக்கையை மார்ச் 15ம் தேதி துணை முதல்வர் தாக்கல் செய்கிறார்.**
- **மாணவர்களுக்கான 24 மணி நேர தகவல் மையம் தொடக்கம்.** **- தமிழக அரசு**

நான் ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியம் பெற்றிருக்கிறேன் (எபே 2:16)

இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு அதன் பின் குமாரனுடைய ராஜ்ஜியத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறேன் (கொலொ. 1:13)

நான் மீட்கப்பட்டிருக்கிறேன். என் பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டிருக்கிறது (கொலா 1:14)

கிறிஸ்து மகிமையின் நம்பிக்கைக்காக எனக்குள் இருக்கிறார் (கொலொ 1:27)

நான் ஆவிக்குரிய ரீதியில் விருத்தசேனம் பண்ணப்பட்டிருக்கிறேன். என்னுடைய பாவ சரீரம் களைந்து போடப்பட்டிருக்கிறது (கொலோ 2:11)

நான் கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டு எழுப்பப்பட்டு, கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறேன் (கொலோ 2:12, 13).

நான் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைப் பெற்றிருக்கிறேன் (2 தீமோ 1:7)

நான் எனது ரீதியின் கிரியைகளின் படி இரட்சிக்கப்படாமல் அவருடைய இரக்கத்தின் படி இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் (தீத்து. 3:5)

நான் இரக்கத்தைப் பெறவும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத்தண்டனை சேரும் உரிமை பெற்றிருக்கிறேன் (எபி. 4:16)

நான் திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவனாகும் படி மகா மேன்மையும், அருமையுமான அருமையுமான வாக்குத்தத்தங்கள் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது ( பேது. 1:4).